Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 30 (03.04.2003) வியாழக்கிழமை இதழ் :182

மேவின்
ரெயிலறிங் அன் காமன்ஸ்

15 வருட காலமாக யாழ். குடாநாட்டில் அநேகரின் நன்மதிப்பைப் பெற்ற எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றது. அனைவரதும் விருப்பம் போல.

கல்யாண சூட் - சர்வாணி
நெஷனல் - சேட்
லோங்ஸ் - சோட்ஸ்
இலாஸ்டிக் சோட்ஸ்

போன்ற ஆண்களுக்கான சகல தையல் வேலைகளையும் பெற நாடுங்கள்

28, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்

(சி-736)

# நகரின் மத்தியில் படைமுகாம் அமைக்கும் திட்டம் நிறுத்தம்!

## புலிகள், தமிழ்க்கூட்டமைப்பு, பொதுமக்கள் எதிர்ப்பின் விளைவு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான நிலப்பரப்பில், புதிதாக இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை இடைநிறுத்துவதாக பாதுகாப்பு அமைச்சும், இராணுவத் தரப்பும் அறிவித்திருக்கின்றன. விடுதலைப் புலிகள், தமிழ்க் கூட்டமைப்பினர் மற்றும் பொது அமைப்புக்கள் இந்நடவடிக்கையை எதிர்த்து மேற்கொண்ட முயற்சியினால் முகாம் அமைக்கும் நடவடிக்கை கைவிடப் பட்டுள்ளது.**

வேறொரு புதிய இடத்தில் - இந்த முகாம் அமைக்கப்படவிருப் பதாகத் தெரியவருகிறது.

யாழ். மாநகர சபைக்குச் சொந்த மான நிலப்பரப்பில் இராணுவ முகாம அமைப்பதை நிறுத்துவது தொடர் பாக - தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள், நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை சந்தித்துப் பேசினர்.

பாதுகாப்பு அமைச்சின் அலு வலகத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சந் திப்பில் - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் ஒஸ்ரின் பெர் ணான்டோ, மேலதிக செயலாளர் கரலியத்த மற்றும் இராணுவத் தள பதி லயனல் பலகல்ல ஆகியோரும்,

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் - நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, இரா. சம்பந்தன், (10 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் அமைப்பு நேற்றும் தொடர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குச் சொந்த மான நிலப்பரப்பில் இராணுவ முகாம் அமைக்கும் பணி, நேற்று இரவு 7 மணி வரை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (சு)

## வரதன் குழு தலைவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் இராணுவத்து டன் இயங்கிவந்த 'வரதன் குழு' வின் தலைவர், நேற்று ஆரையம் பதியில் இனந்தெரியாத நபர் ஒருவ ரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆரையம்பதி வைத்தியசா லைக்கு முன்பாக நேற்றுக் காலை 11.15 மணியளவில் சுட்டுக்கொல் லப்பட்ட இவர், சீனித்தம்பி ரஞ்சன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கி 800 மில்லியன் உதவி

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திக் குழுவின் உதவி யாக - இலங்கைக்கு 800 மில்லி யன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

உதவித்தொகையாகவும், வட் டியில்லாக் கடனாகவும் அடுத்த நான்கு வருடங்களில் இந்த உத வித்தொகை வழங்கப்படும். ஐந் தாண்டுகளுக்கு முன் உலகவங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை மட்டும் வழங்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாலா - பீரிஸ் லண்டனில் சந்திப்பர்

சமாதானப் பேச்சுக்கள் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மேலதிக அதிகாரங் களை வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விடுதலைப் புலிகளின் அர சியல் ஆலோசகர் கலாநிதி அன் ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி லண்டனில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. கடலிலும், தரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரசவ விடுதிமீது அமெரிக்கா குண்டுவீச்சு



காயமடைந்த சிறுவனொருவன்.

பக்தாத் செம்பிறைச் சங்க பரா மரிப்பிலிருந்த பிரசவ வைத்திய சாலை மீது, நேற்றுக்காலை அமெ ரிக்க விமானங்கள் குண்டு வீசின. (10 ஆம் பக்கம் பார்க்க)

# கல்லுண்டாய்வெளிப் பகுதியில் படைமுகாம் அமைக்க முஸ்தீபு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை வளாகத்தில் அமைக்கப்பட விருந்த இராணுவ முகாமிற்கான பணிகள் இடைநிறுத் தப்பட்டதைத் தொடர்ந்து - காக்கைதீவு, பொம்மை வெளி, கல்லுண்டாய் ஆகிய பிரதேசங்களில் உள்ள பொருத்தமான பகுதியொன்றில் புதிதாக இராணுவ முகாம் அமைப்பது தொடர்பாக இராணுவத்தினர் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

யாழ்.நகரின் மத்தியிலுள்ள சுபாஸ் ஹோட்டேல், ஞானம்ஸ் ஹோட்டேல் ஆகியவற்றிலுள்ள இராணுவப் படைமுகாம்களை, யாழ்.மாநகர சபை கட்டடம் அமைந் திருந்த பகுதிக்கு மாற்றுவதற்கான முயற்சிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை, இப் பகுதியில் இராணுவ முகாம் அமைப்பதை நிறுத்தும் படி சகல தரப்புக்களிலிருந்தும் பாதுகாப்பு அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை- நேற்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களும் இது விடயமாகக் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து - யாழ்.மாநகரசபை கட்டடம் அமைந் திருந்த பகுதியில் முகாம் அமைப்பதை இடைநிறுத்தி விட்டு - காக்கைதீவு, பொம்மைவெளி, கல்லுண்டாய் ஆகிய பிரதேசங்களில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சுகாதார தொண்டர் மறியற் போராட்டம்



சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுவோர், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, யாழ்.நகரிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக நேற்றுக்காலை மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் நேற்றுக்காலை 8 மணிமுதல் மாலைவரை பணிமனை வாயிலை வழிமறித்து நடைபெற்றது. இதில் 300 இற்கு மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

இவர்களது போராட்டத்தினால், சுகாதார சேவைகள் பணிமனையின் நாளாந்தக் கடமைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. 'பலவருடங்கள் ஏமாற்றி யது போதும், இனிமேலாவது நிரந்தரப்படுத்து',(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



யுத்தத்துக்கு தலைமை எண்டு உள்ளுக்க சொல்லுறா...! பேச்சு தொடருமெண்டு வெளியில பேசுறா...!

## அரசு மாறினாலும் பேச்சு தொடருமாம்; சந்திரிகா கூறுகிறார்

எந்த அரசாங்கம் மாறினாலும் - பேச்சுவார்த்தை தொடர்ந்து நடை பெறுமென்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருப்பதாக அவரின் பேச் சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த செய் தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இதனைக் கூறினார்.

மீண்டும் ஒருமுறை போர் ஆரம்ப (10 ஆம் பக்கம் பார்க்க)

# நெல்லியடி, மானிப்பாய் சம்பவங்கள் தொடராது

## யாழ். வந்த பொலிஸ்மா அதிபர் உறுதி



யாழ். நகருக்கு வந்த பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா.

மானிப்பாய் - நெல்லியடி அசம்பாவிதங்கள் இனிமேல் தொடராது எனவும், குடாநாட்டில் முறைப்பாடுகளைத் தமிழில் பதிவுசெய்ய நட வடிக்கை எடுப்பதாகவும் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்செய்த பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த இவர், பருத்தித்துறை, காங்கேசன் துறை பொலிஸ் நிலையங்களுக்கு விஜயம் செய்தார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் பொலிஸ் மா (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-730)

## ஆங்கில சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில நெறியினரின் 'ஈபொக்' எனும் ஆங்கில சஞ்சிகை நாளை வெளியிடப்படுகின்றது. கலாசாலை பிரதான மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இந்நூல் வெளியீட்டு நிகழ்வில், பிரதம விருந்தினராக உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கிலப் பகுதித் தலைவர் கருணாநிதி கலந்துகொள்கிறார்.

# இலவச மருத்துவ முகாமில் 200 பேருக்கு கண்ணாடிகள்


(நவிண்டில்)

இலவச கண் பரிசோதனையும், பொது மருத்துவ முகாமும் கரணவாய் மகாவித்தியாலயத்தில், வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் கடந்த ஞாயிறன்று நடத்தப்பட்டது.

இம் மருத்துவமுகாமில் - வைத்திய நிபுணர்கள், யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடமாணவர்கள், கிராம அலுவலர்கள், பொது நிறுவனத்திலுள்ளவர்கள், படிப்பக நிர்வாகிகள் ஆகியோருடன், லயன் P.கதிரமலை, பருத்தித்துறை பிரதேச செயலர் லயன் ஆ.சிவசாமி மற்றும் லயன் அங்கத்தவர்களுடன் பெருமளவு பொதுமக்களும் கலந்து கொண்டனர். இரு நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு இச்சிகிச்சை முகாமில் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (116)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 08 - 04 - 1933



உதிர்வு 05 - 03 - 2003

### அமரர் அமரசேனாதிபதி பரமகுரு(அமுதா அப்பா)

உங்கள் நினைவுகள் எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வல்வை வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி அறிந்து விரைந்து வந்து உதவி செய்த அனைவருக்கும் தொலைபேசி, தபால், தந்தி மூலம் ஆறுதல் வார்த்தை கூறிய உறவினர், நண்பர்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு பல வகைகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (04.04.2003) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்,**
மனைவி - சறோஜினிதேவி
மகள் - K.கவிதா
மருமகன் - S.கோணநாயகம்

**தீருவில் வீதி,**
**வல்வெட்டித்துறை.** (சி-739)

*தகவல் - தி.நவரெத்தினம் (மெம்பர்)*

## சிறுவிளம்பரம்

### உடன் தேவை

ஆண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள தையற்காரர் உடன் தேவை. நேரில் வரவும்.

**Tee Ciy Tailoring**
125, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி-743)


**ராஜா** யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
**ரோஜாக்கூட்டம்**
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும் (சி-732)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சத்தியராஜ், குஷ்பு நடித்த
**உன்னைக் கண் தேடுதே**
வெள்ளி, சனி, மட்டும் 8.45 இற்கு
**HOLLOW MAN**
6 ஆம் திகதி முதல் Jurassic Park-3 (சி-731)



**BIT**
Bachelor of Information Technology
University of Colombo School of Computing



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2003/2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி - 20.04.2003 IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் IIS நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
No. 100, Clock Tower Road, Jaffna
Tel : 21 222 2831 (சி-740)


## இன்றைய நாள் இனிய நாள்

**03-04-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- உஷ்ணசுரம், சரீர சோர்வு, பிரயாணக்கஷ்டம், வாக்குக் கலகம், தொழில்குறைவு. |
| இடபம் | :- தொழில் விருத்தி, காரிய சித்தி, ஊக்கமிகுதி, தனதானிய லாபம், மனக்கவலை. |
| மிதுனம் | :- சத்துரு பயம், இனசன கொண்டாட்டம், நற்குண விருத்தி, உயர்ந்த நிலை. |
| கர்க்கடகம் | :- இரத்தப் பெருக்கு, தாரசுக தடை, மனக்கவலை, தேக ஆரோக்கியக்குறைவு. |
| சிங்கம் | :- பிரயாச மிகுதி, பிரயாணம், குடும்பானுகூலம், புதிய ஸ்தானம், சிநேகலாபம். |
| கன்னி | :- பிரயாணக் கஷ்டம், தாழ்ந்த நிலை, களஸ்திரசுகம், வீண்பழிகேட்டல், மனப்பயம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- சிநேகிதரால் கவலை, தேகமெலிவு, புதிய ஸ்தானம், தனித்தநிலை, புத்திரரால் நன்மை. |
| விருச்சிகம் | :- தொழில்கேடு, இல்லச்சிறப்பு, கோபமிகுதி, வீண்பழிகேட்டல். |
| தனு | :- ஆரோக்கியம், அதிக பிரயாசை, இல்லச்சிறப்பு, பிரயாணக் கஷ்டம், வாகன நஷ்டம். |
| மகரம் | :- வாக்கு வசீகரம், உக்கிராண வெற்றி, வாகனலாபம், நன்மதிப்பு. |
| கும்பம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, தருமகாரிய சித்தி, பலவித ரோகபீடை. |
| மீனம் | :- தாரபுத்திர ரோகபீடை, பெரியோர் மதிப்பு, தொழிற்சிறப்பு, நன்மதிப்பு. |

# பணிநிலை வேண்டுகை

சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:- ஆயப்பகுதி, நடுவப் பணியகம், கிளிநொச்சி காலம் :-12.04.2003, மு.ப 10.00 மணி**

## பணிநிலை

01) ஆய அலுவலர் (இருபாலாரும்)
02) ஆய உதவியாளர் (ஆண்கள்)
03) எழுதுநர் (ஆண்கள்)
04) தட்டெழுத்தாளர் (ஆண்கள்)
05) சமையலாளர் (ஆண்கள்)
06) சமையல் உதவியாளர் (ஆண்கள்)
07) பாதுகாப்புப் பணியாளர் (ஆண்கள்)
08) மொழிபெயர்ப்பாளர் (ஆண்கள்)

## கல்வித் தகைமை

பணிநிலை 01,03 இற்கு க.பொ.த(உ/த) சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 02 இற்கு க.பொ.த(சா/த) கற்றிருத்தல்.
பணிநிலை 04 இற்கு க.பொ.த(சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.
பணிநிலை 05 இற்கு உணவுவகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
பணிநிலை 06 இற்கு 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும், நன்னடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர். எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

## சிறப்புச் சலுகை

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்துதரப்படும்.

# ஆயம், நிதித்துறை, தமிழீழம்

(சி-744)

## களுத்துறைக் கைதிகள் அடையாள உண்ணாவிரதம்

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகள், புத்தாண்டு தினமான ஏப்ரல் 14 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமது விடுதலையை விரைவுபடுத்தக் கோரியே தமிழ் அரசியற் கைதிகள் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

### சத்துணவு வழங்கல்

ஐந்து வயதுக்குட்பட்ட நிறை குறைந்த பிள்ளைகளுக்கான சத்துணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று மு.ப.10 மணிக்குக் காந்தியூர் பாலர் பாடசாலையில் நடைபெறும் எனப் பருத்தித்துறைப் ' பிரதேசசெயலர் ஆ.சிவசாமி தெரிவித்தார். (116)

# ஜெனீவாவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் தமிழர் மனித உரிமை மையத்தின் ஆவணம்!

ஜெனீவாவில் ஆரம்பமாகி நடைபெறும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 59 ஆவது கூட்டத் தொடரின்போது, தமிழர் மனித உரிமைகள் மையம் - அறுபத்திமூன்று பக்க ஆவணம் ஒன்றை விநியோகித்துள்ளது. பலவிதமான தகவல்கள், சிறிலங்காப் படையினரின், மனித உரிமை மீறல்கள், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட பொதுமக்களின் விபரங்கள் மற்றும் ஒப்பந்த மீறல் சம்பவங்கள் என்பவற்றை உள்ளடக்கி அவ்வாவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து, அரசாங்கப் பணத்தில் இயங்கி, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும், உரிமைக்கும் எதிராகப் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற குழுவின் போலித்தனத்தை, அவ் ஆவணம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளதுடன், அதற்கு ஜனாதிபதி சந்திரிகா நற்சான்றிதழ் வழங்கியிருப்பதையும் அவ்வாவணம் பதிவில் கொண்டுவந்துள்ளது.

தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச்செயலாளர் ச.வி.கிருபாகரன் - ஆணைக் குழுவின் தலைவிக்கு எழுதிய கடிதத்தில், தற்போதைய போர்நிறுத்த காலத்திலும், பேச்சுவார்த்தைக் காலங்களிலும், தமிழ்மக்கள் மீது மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும், அவற்றை மனித உரிமை ஆணைக்குழு உடனடியாக ஆராயவேண்டும் எனவும், நிலைமைகளை கண்காணிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர், இன்றுவரை முப்பத்து இரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் அரசபடையினரால் வடக்கு - கிழக்கில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் யுத்தம் வெடித்தால் நானே தலைமை தாங்குவேன்!

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

ஆறு சுற்றுப்பேச்சுக்கள் நடந்து முடிந்திருக்கின்றபோதும் - யுத்தத்திற்குக் காரணமான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி அரசாங்கம் - விடுதலைப்புலிகளுடன் பேசவில்லை என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று முன்தினம் இராணுவத்தினரின் நலன்புரி நிலையத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் 36 ஆயிரமாக இருந்த படையினரின் எண்ணிக்கையை 1 லட்சத்து 56 ஆயிரமாக அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேவையற்ற அரசியல் யுத்தத்தில், அதிகளவிலான உயிர் களை இழந்த 15 நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. யுத்தத்தால் நாடு பெருமளவு உயிர்களை இழந்துவிட்டது.

இப்போது சமாதானப் பேச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இலங்கை அரசினதும், நோர்வே அரசினதும் செலவில் பேச்சுகளுக்குச் செல்லும் புலிகள் - என்னைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்போதுள்ள அரசியற்சூழலில் பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மீளப்பெறப்போவதில்லை. அரசியலமைப்புச்சட்டம் எனக்கு அளித்திருந்த நிறைவேற்று அதிகாரங்களில் 85 சதவீதமானவற்றைப் பிரதமருக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும் வழங்கிவிட்டேன்.



விழாவில் இராணுவத்தளபதி மற்றும் கடற்படைத் தளபதியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இந்த அதிகாரங்களை ஒரு கடிதத்தின் மூலம் என்னால் மீளப் பெற முடியும். சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும் என்பதற்காகவே இந்த அதிகாரங்களை அவர்களிடம் விட்டுவைத்திருக்கிறேன் மீண்டும் யுத்தம் வெடித்தால் நானே அதற்கு தலைமை தாங்கிச் செல்வேன் என்றும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை-தங்கவேலாயுதபுரத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கை!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேசத்தில், சுமார் 12 வருடகாலம் அகதிமுகாம்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களை, அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருக்கோவில் அகதிமுகாமில் வாழ்ந்துவரும் அகதிகள் தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது. தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்த 434 குடும்பங்களைச் சேர்ந்த 1566 குடும்ப அங்கத்தவர்களையும் மீளக்குடியமர்த்த திட்டமிட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சிறான் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானித்தின்படி - கிழக்கில் முதற்கட்டமாகத் திருக்கோவில் தங்கவேலாயுதபுரத்தில் அகதிக் குடும்பங்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துவருவதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் தெரிவித்தார்.

# ஒரு மாதத்துள் மின் கட்டணம் செலுத்தாவிடின் துண்டிப்பு!

## அமைச்சர் ஜெயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

மின் கட்டணத்துக்கான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தத் தவறும் பாவனையாளர்களின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என்று அமைச்சர் கரு ஜெயசூரிய நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மேலதிக கட்டணமாக நிலுவைத் தொகையில் 10 வீதம் அறவிடப்படும் என்றும் அவர் கூறினார்.

மின் இணைப்புக் கட்டணமாக 800 ரூபா அறவிடப்படுவதாகவும், பொருட்கள் சேவைகள் வரியாக 20 வீதம் அறவிடப்படும் என்றும் அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு வாவியில்

# சட்டவிரோத மீன்பிடியால் மீன்கள் அழியும் ஆபத்து

(மட்டக்களப்பு)

மட்டு.நகரின் வாவியில் மீனினம் அழிந்து வருவதாக மீனவமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பாவித்து வாவியில் மீன்பிடிப்பதால், மட்டக்களப்பு வாவியில் மீன், இறால், நண்டு போனறவை அருகிவருவதாக மட்டக்களப்பு மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். பாலசுப்பரமணியம் தெரிவித்தார்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஒன்று கூடலின்போது, அவர் மேலும் பேசுகையில் - இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் வாவியை நம்பிவாழும் குடும்பங்கள் 18 ஆயிரமாகும. இக்குடும்பங்கள் மீன் பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மட்டக்களப்பு வாவி இலங்கையிலே மிக நீளமான வாவியாகும். இதன் நீளம் 75 கிலோமீற்றர். இம்மாவட்டத்தில் நூற்றுக்கு 65 வீதத்தினர் வாவி மீன் பிடித் தொழிலையே செய்துவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகளுடன் மூன்றாவது தடவையாக சந்திப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமான மூன்றாவது சந்திப்பு கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு மட்டக்களப்பு தாண்டியடிப் பிரதேசத்திலுள்ள பாடசாலையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா தலைமையில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் முதற் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளை மீண்டும் ஒப்படைப்பது சம்பந்தமாக இனங்காட்டுவதற்காகவே மூன்றாம்கட்ட அமர்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது, தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் பொறுப்பாளர்களும், முஸ்லிம் பிரதிநிதிகளின் தரப்பில் வீடமைப்பு பிரதியமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது முஸ்லிம்களை விவசாயத்துக்கு அனுமதிப்பது தொடர்பான பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்பட்டன.



மட்டக்களப்பு தாண்டியடியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகளை முதலாவது படத்திலும் சந்திப்பில் உரையாற்றும் புலிகளின் அம்பாறை அரசியல் பொறுப்பாளர் பாவாவையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.

## தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு

# சட்டத்தரணிகள், சாட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்!


## உயர் நீதிமன்ற நீதியரசர் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ்த் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த, பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளும், சாட்சிகளும் உரியமுறையில் ஒத்துழைக்கவேண்டும் என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

அரச சட்டத்தரணிகள் மட்டுமனறி, கைதிகளின் சார்பில் வழக்குகளை நடத்தும் சட்டத்தரணிகளும், சாட்சிகளும் முழு ஒத்துழைப்புக் கொடுத்தால், பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளை விரைவாக முடிக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 84 தமிழ் அரசியற்கைதிகள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகச் சட்டமா அதிபர் கமலசபேசன் தெரிவித்தார்.

# ஆனையிறவு யாரிடம் உள்ளதோ யாழ்ப்பாணம் அவருக்குச் சொந்தம்!



**ஆனையிறவு வெற்றிக்கு வித்திட்ட குடாரப்புத் தரையிறக்கம் பற்றி - கேணல் பால்ராஜ், அண்மையில் அத்தரையிறக்க வெற்றிவிழா வடமராட்சி கிழக்கில் நடைபெற்றபோது, ஆற்றிய உரையின் இரண்டாம் பகுதி.**





(நேற்றைய தொடர்ச்சி....)

அந்த வகையிலே குடாரப்புப் பகுதிக்குரிய அணித்தளபதி கேணல் விதுஷா தலைமையில் இந்த 'பொக்ஸ்' நடவடிக்கையை ஒப்படைந்திருந்தோம். அதாவது, இங்கே நாகர்கோவில் பகுதியைக் கவர் பண்ணும் ஒரு தாக்குதற் பிரிவு, மருதங்கேணிப்பகுதியால் தப்பியோடிவரும் இராணுவத்தைத் தாக்கும் ஒரு பிரிவு, கண்டல் பகுதியைக் கவர்பண்ணும் ஒரு பிரிவு, கடற்பகுதியைக் கவர்பண்ணும் ஒரு தாக்குதல் பிரிவு என நான்கு பிரிவுகளாகக் குடாரப்பில் பொக்ஸாக அடிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை- ஒருபெரும் நீரேரியைக் கடக்க வேண்டும். இத்தாவிலுக்கிடையில் இராணுவவேலி ஒன்றை அமைக்கவேண்டி இருந்தது.

அதில் கடற்புலிகளின் படகுச் சேவைக்காக ஒரு பகுதி கரையில், ஒரு படகு அணி மறுகரையில், ஒரு படகுசேவை இதேபோன்று இத்தாவில் பகுதியில், எழுதுமட்டுவாள் பகுதிக்கு உதவிக்குவரும் படைகளைத்தடுத்து நிறுத்த ஒரு பெரும் படைப்பிரிவு. மறுகரையில் - ஆனையிறவில் இருந்து தப்பி வந்து சாப்பாட்டுக்கு வரும் படையினரைக் கவர்பண்ண வரும் ஒரு பெரும் படைப்பிரிவு. கிளாலிப் பகுதியால் வரும் இராணுவத்தைத் தடுப்பதற்காக ஒரு படைப்பிரிவு, கண்டல் பகுதியை கவர்பண்ண ஒரு படைப்பிரிவு என நான்கு பெரும் படைப்பிரிவுகள் அமைக்கப்பட்டன.

மொத்தமாக ஒன்பது படைப் பிரிவுகளையும், கடற்புலிகள் தரையிறக்கியாக வேண்டும். ஒன்பது படைப்பரிவுகள் என்றால் 1200 பேர். மீதி கடற்புலிகள் அணியையும், ஈடுபட்ட முக்கிய அணிகளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

## குடாரப்புத் தரையிறக்கம் பற்றி களமுனைத் தளபதியின் அனுபவம்!

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையை மிகவும் இரகசியமாகத் தரையிறக்க வேண்டியிருந்தது. தரையில் இருக்கும் எதிரிக்குத் தெரியாமல் ஒரு பெரும்படை அணியைத் தரையிறக்க வேண்டும்.

தளபதி சூசை அவர்களிடம் கேட்டேன் - இரவு 8.30 அல்லது 8.45 மணிக்குள் உங்களால் இரகசியமாக இறக்கித்தர முடியுமா என்று. அவர் உறுதிமொழி அளித் தார்.

அவ்வளவு தளபதிகள், போராளிகள் மத்தியில் கேணல் சூசை எமக்கு உறுதிமொழி தந்தார் இந்த இரகசிய அணியை நான் நிச்சயமாகத் தரையிறக்குவேன் என்று. அடுத்ததாக முக்கிய பொறுப்பாளர்களைத் தரையிறக்க வேண்டும். அடுத்ததாக மாலதி படையணியைத் தரையிறக்க வேண்டும். சோதியா படையணியைத் தரையிறக்க வேண்டும். இம்ரான் பாண்டியன் விசேட படை அணிகளைத் தரையிறக்க வேண்டும். கடற்புலிகளின் அணிகளைத் தரையிறக்க வேண்டும். இப்படிப் பல அணிகளைத் தரையிறக்க வேண்டியிருந்தது. அப்போது கூறினார்- 24 மணி நேரத்தினுள் தரையிறக்கியே தீரவேண்டும் என்று.

தரைப்படைக்குக் கடலில் இறங்கிய அனுபவம் இல்லை. எப்படிப் படகுகளில் ஏறுவது என்றே தெரியாது. அப்போது கடலில் என்ன நடக்கும், தரையில் எவ்வாறு தரையிறங்க வேண்டும், அதற்கான பொறுப்பாளர்களைச் சரியாக நியமித்துப் பாதுகாப்பாக வண்டியில் ஏற்றுவதற்கான அணிகளை நிறுத்தி இருந்தார். தரையிலிருந்து ஆட்களை எடுத்து அணிகளை நிறுத்தியிருந்தார்.

அந்த வேளை தாக்குதல் 26 ஆம் திகதி இரவு ஆரம்பமானது. ஆறு மணியளவில் முதலாவது அணி படகில் ஏற்றப்பட்டது. சரியாக 8.45 மணிக்கு தரையில் நின்ற வேவு அணியையும் ஒரு பிரச்சினையும் இன்றி முதலாவது அணியையும் மிகவும் இரகசியமாக கடற்புலிகள் குடாரப்புப் பகுதியில் தரையிறக்கி விட்டார்கள் என்று அறிவித்தார்கள்.

அப்போது எனக்கு மிகவும் நம்பிக்கை இருந்தது. அவர்கள் போக வேண்டிய இடத்தை அடைந்து விட்டார்கள். இனிப் பிரச்சினை இல்லை. நாம் இனி எப்படியும் முழுமையாக இறக்கப்பட்டுவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம்.

(நாளை தொடரும்...)

# ரயில் வொரண்டுடன் செல்லும் ஊழியரை திருப்பி அனுப்பும் ரயில்வே அதிகாரி

(வவுனியா)

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் - ரயில் வொரண்டுடன் வவுனியா ரயில் நிலையத்திற்குச் சென்று ஏமாற்றமடைந்து, பின்னர் பணம் செலுத்திப் பிரயாணச்சீட்டைப் பெற்றுச் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகத்தர்கள்- பிரயாணிகள் ரயில் வொரண்டுடன் வவுனியா ரயில் நிலையத்திற்குச் சென்று, அதை கொடுத்துப் பிரயாணச் சீட்டைக் கேட்கும்போது - வொரண்டிலுள்ள திணைக்கள சுட்டெண் றப்பர் முத்திரையினால் நிரப்பப்பட வேண்டும். இல்லையேல் வொரண்ட் வழங்கப்பட முடியாதென அங்கிருக்கும் உதவி ரயில் நிலைய அதிபர் தெரிவித்து மறுத்து வருகிறார். இது பற்றித் திணைக்களங்களுக்குச் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுவிட்டதாக அவர் தெரிவித்தார். இச்சுற்றுநிருபம் பல திணைக்களங்களுக்குக் கிடைக்கவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கடந்த 21 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர் ஒருவரும், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் பிரயாணிகள் வொரண்டுக்கு ரிக்கெற் பெற முடியாமல், பணம் செலுத்தி ரிக்கற் பெற்றுப் பயணத்தை மேற்கொண்டனர். ஆனால், 25 ஆம் திகதி கொழும்பு- கோட்டை ரயில் நிலையத்தில் அதேதிணைக்கள ரயில் வொரண்டுக்கு எவ்வித பிரச்சினையுமில்லாமல் ரிக்கற் பெற்றுப் பிரயாணம் செய்யமுடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நீர் அள்ளச் சென்ற பெண்ணிடம் தங்கநகைகள் அபகரிப்பு!

சாவகச்சேரி வடக்கில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலயத்தில் தண்ணீர் அள்ளச் சென்ற பெண்ணொருவரின் கழுத்துச் சங்கிலியும், கைச்சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வடக்கிலுள்ள இலுப்பத்துப் பிள்ளையார் கோயிலில் தண்ணீர் அள்ளச் சென்ற அதேயிடத்தைச் சேர்ந்த பெண்ணிடம், இனந்தெரியாத நபர் ஒருவர் கழுத்துச் சங்கிலியையும், கைச்சங்கிலியையும் பலவந்தமாக அறுத்துக்கொண்டு சென்றுள்ளார்.

அண்மைக்காலமாகத் தென்மராட்சிப் பிரதேசத்தில் கலாசாரச் சீர்கேடுகளும், திருட்டுக்களும் அதிகரித்த வண்ணமுள்ளன.

இதனால், பெண்கள் தனியாக வீதிகளில் நடமாட அச்சமடைந்துள்ளனர்.

# பேராசிரியர் ஜான்ஸுக்கு யாழ்ப்பாணத்தில் பாராட்டு

பனைவள ஆராய்ச்சியாளரும், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்லைக்கழக உயிரியல் இரசாயனப் பிரிவுத் தலைவருமான பேராசிரியர் ஈ.ஆர். ஜான்ஸ்- பனை அபிவிருத்திச் சபையினால் நேற்றுமுன்தினம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் பி.ப.3 மணியளவில் பனை அபிவிருத்திச் சபையின் யாழ்.தலைமைக்காரியாலயத்தில் பொதுமுகாமையாளர் கோகுலதாஸ் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் இராஜதுரை, பரி.யோவான் கல்லூரி அதிபர் தனபாலன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம் ஆகியோர் பாராட்டுரைகளை நிகழ்த்தினர். பனை அபிவிருத்திசபை சார்பில் -தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் சிவமகாராஜா -விழாநாயகனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (சு)

## கல்விச் சுற்றுலாவுக்கு மகளிர் குழு

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் உதவியுடன் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில், 7 பேர் கொண்ட மகளிர் குழு- கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கை சென்றுள்ளது.

சுற்றுலாவை மேற்கொள்ளும் இக்குழு, பல பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் செல்லவுள்ளனர். இவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ். திரும்புவர் எனத் தெரியவருகிறது. (ரா)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் :ச.யதுசனா
முகவரி: சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி.



ஆறாவது அகவையில்



பெயர் :ப.கலைவேந்தன்
முகவரி: மருதடி மேற்கு, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றார் ஒப்பம்




# இறால் வளர்ப்பு

# அடிப்படை வசதிகளும், கட்டமைப்பும்

மா.ஸ்ரீஸ்கந்தகுமார்
யாழ்.பல்கலைக்கழகம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

### மின்சார உற்பத்தி

இறால் குஞ்சுற்பத்தித் தொட்டிகளின் (உள்ளக) வெப்பநிலைச் சீராக்கத்திற்கும், தாவர உயிருணவு (அல்கா) உற்பத்திக் கட்டமைப்புத் தொகுதிகளுக்கு வேண்டிய புளோரொளிர்வுக் குழாய் விளக்குகளைத் தொடர்ச்சியாக ஒளிர்விப்பதற்கும், அல்கா வளர்ப்பு அறைகளை குளிர் ஊட்டுவதற்கும், இறால் குஞ்சு வளர்ப்பு அல்கா, ஆட்டிமியா உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களைத் தொற்று நீக்கலுக்கும் மின்சாரம் அவசியமாகும்.

**Oven, Autoclave** என்பவற்றுக்கும், நுணுக்குக் காட்டி, UV உபகரணங்கள், **Algae Counter** (அல்காக்கல எண்ணிக்கையை அளவிடும் உபகரணம்) மின்சாரத் தராசு, குளிர்சாதனப்பெட்டிகள் என்பவற்றின் இயக்கத்திற்கும் மின்சாரம் ஆனது தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்களிற்கும் குஞ்சுற்பத்திக் காலத்தில் அவசியமாகின்றது.

மின்சாரமானது புறவளங்களில் (நீர் மின்சாரம்) இருந்து பெறப்படினும், குஞ்சு உற்பத்தி நிலையத்தினுள்ளேயே



இறால் குஞ்சுற்பத்திநிலைய நடவடிக்கைகளுக்குப் போதுமான மின்சாரத்தை உற்பத்திசெய்யக் கூடிய மின்னுற்பத்தி நிலையம் அமைத்தல் அவசியமாகும்.

### குஞ்சு உற்பத்திக் கட்டமைப்புத் தொகுதி

இறால் குஞ்சுற்பத்திக் கட்டமைப்புத் தொகுதியானது இரு உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

1. இறால்களின் இலிங்க முதிர்ச்சியுறலைத் தூண்டும் பிரிவு
2. இறால் குஞ்சு உற்பத்திப் பிரிவு

இறால் குஞ்சுற்பத்திப் பிரிவானது மேலும்

1. உள்ளக இறால் குஞ்சு வளர்ப்புப் பிரிவு
2. வெளியக இறால் குஞ்சு வளர்ப்புப்பிரிவு.

என வேறுபிரிக்கப்படும். குஞ்சுற்பத்திக்குத் தேவையான பெற்றோர் இறால்களை கொள்வனவுசெய்து, அவற்றை "நோய்புகல் தடைப்பிரிவில்" வைத்துப் பராமரிப்பதன் மூலம் பெற்றோர் இறால்களில் இருந்து வளர்ப்புத் தொகுதிக்குள் நோய்க்கிருமிகள் புகுவது தடுக்கப்படுகின்றது. தொற்று நீக்கப்பட்ட இப்பெற்றோர் இறால்கள்- இலிங்க முதிர்ச்சியுறுவதற்காக, இலிங்க முதிர்ச்சியுறும் தொட்டிக்குள் ஆண், பெண் இறால்களுக்கான விகிதம் 1:1 என்றவாறு இருக்கத் தக்கதாக விடப்படும்.

இந்த இறால்களில் பெண் இறால்களுக்கு மாத்திரம் அவற்றின் கூட்டுக்கண்களில் ஒன்று அகற்றப்படும். இது **Eye stalk ablation** எனப்படும்.

கண்ணகற்றல் மூலம் பெண் இறால்களின் உடலில் ஏற்படும் ஓமோன் சீராக்கத்தினால், பெண் இறால்கள் பால் முதிர்ச்சியுற்று, சினையிடலுக்குத் தயாராகின்றன. (இயற்கை நிலமைகளில் இவ் ஓமோன் சீராக்கத்தை ஒளிச் செறிவும், ஒளிக்கால அளவும் ( **Photoperiod**) தீர்மானிக்கின்றன). கண்ணகற்றப்பட்ட இப்பெண் இறால்கள்- தோல் கழற்றலுக்குட்பட்டு, முதிர்ச்சியடைந்து, ஆணுடன் கலவி புரிந்து சினையிடலுக்குத் தயாராகும்.

சினையுற்ற பெண் இறால்களை நேரடியாக நீர்த் தொட்டிக்குள் வைத்து, நீரின் கீழ் ஒளிரச் செய்யப்பட்ட மின்சூள் ஒன்றினூடாக அதன் முதுகுப்புறத்தை அவதானிக்கும் போது, அதன் உடலினுள் தெளிவான நீண்ட அழுக்குப் பச்சைநிறத்தில் சினை காணப்படும் இறால்கள் மட்டும் வலையால் பிடிக்கப்பட்டு, சினையிடலுக்காகச் சினையிடல் தொட்டிக்கு மாற்றப்படும்.

இவை ஒரு தடவையில் 100,000 தொடக்கம் 600,000 முட்டைகளை இடும் சினையிடலானது- பெரும்பாலும் இரவு 8 மணிக்கும் காலை 6 மணிக்கும் இடையில் நிகழும். (பெரும்பாலான இறால் குஞ்சுற்பத்தி நிலையங்களில் சினையிடலும், குஞ்சு பொரித்தலும் ஒரே தொட்டியினுள்ளேயே நிகழுகின்றது) இம்முட்டைகள் 20 மணித்தியாலங்களில் பொரித்து, **Nauplii** களாகும். இந்நோபிளைக் குடம்பிகளில் ஒளியின் நேரசைவுக்கு உட்படுபவை மாத்திரம் வளர்ப்புக்காகத் தெரிவுசெய்யப்படும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவை இறால் குஞ்சு வளர்ப்புப் பிரிவிற்கு மாற்றப்படும்.

குஞ்சு வளர்ப்புப் பிரிவானது இரு உபபிரிவுகளைக் கொண்டிருக்கும்.

1. உள்ளகக் குஞ்சு வளர்ப்புப் பிரிவு.
2. வெளியகக் குஞ்சு வளர்ப்புப் பிரிவு.

### உள்ளகக் குஞ்சு வளர்ப்புப் பிரிவு

இங்கு இறால்க் குஞ்சுகள், மிக ஆரம்பநிலையில், சூழல் காரணிகளான வெப்பநிலை, ஒளி என்பவற்றைக் கட்டுப்படுத்தி, நோபிளை நிலையில் இருந்து பிந்திய குடம்பி **PL** 5-8 வரை வளர்க்கப்படும்.

### வெளியகக் குஞ்சு வளர்ப்புப் பிரிவு

இறால் குஞ்சுற்பத்தியில் பிந்தியநிலையில் சூழல் காரணிகளின் நேரடித்தாக்கத்தின் கீழ் குஞ்சு வளர்ப்பை மேற்கொள்ளும் பிரிவாகும். இப்பிரிவில் இறால் குஞ்சுகள், பண்ணைகளில் வளர்க்கப்படும்போது எதிர்நோக்கும் உவர்த் தன்மை வேறுபாடு, அதிக வெப்பநிலை போன்ற சவால்களைச் சகிக்கக்கூடிய தன்மையைப் பெறுகின்றன.

இங்கு **PL**- 5-8 இல் இருந்து இறால் பண்ணைகளில் வைப்பிடுவதற்காக அறுவடை செய்யும் **PL**-25 வரை வளர்க்கப்படுகின்றன.

**உணவு உற்பத்தி பதப்படுத்தல் கட்டமைப்புத் தொகுதி**

**1. பெற்றோர் இறால்களுக்கான உணவு:-**

பெற்றோர் இறால்களுக்குப் போசணை மிக்க ஈரல் (மாடு), மட்டிச் சதை, கணவாய் என்பன உறையவைக்கப்பட்டு, சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டு, காலை - மாலை என இரு வேளைகள் வழங்கப்படும்.

பெற்றோர் இறால்களுக்கு அவற்றின் நிறையில் 10% மான உணவு தினசரி வழங்கப்பட வேண்டும்.

**2. குஞ்சுகளுக்கான உணவு:-**

குஞ்சுகளின் பருமனுக்கேற்ப அவை உண்ணும் உணவுகளின் பருமனும் அமையும். குஞ்சுகள் மிகச்சிறியனவாகும். எனவே - இவற்றிற்கு வழங்கப்படும் உணவும் மிகச்சிறியனவாகவே இருக்கும். இறால் குஞ்சுகளுக்கு உணவு வழங்கப்படும்போது குஞ்சுகளின் வயது, பருமன், உணவுத் துணிக்கைகளின் பருமன் என்பன கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

வளரும் குஞ்சுகளுக்கு 2 வகையான உணவுகள் வழங்கப்படுகின்றன.

1. உயிருணவு
2. செயற்கை உணவு

**உயிருணவு:-**

உயிருள்ளநிலையில் குஞ்சுகளுக்கு வழங்கப்படும் உணவாகும். இது தாவரவுணவு, விலங்குணவு என இரு வகைப்படும். வளரும் குஞ்சுகள் புரட்டோசோபியா நிலையில் உணவு உண்ணத் தொடங்குகின்றன. இவற்றின் உணவு விருப்பானது, அவற்றின் வயதுடன் வேறுபடுகின்றது. வளரும் குஞ்சுகள் ஆரம்பத்தில் தாவர உணவையும், பின்னர் விலங்கு உணவையும் விரும்பியுண்ண ஆரம்பிக்கின்றன.

தாவரவகை உணவுகள் அல்கா இனத்தைச் சேர்ந்தனவாகும். இந்த அல்காக்களாவன **Skletonema costatum, Cheatoceros** இனங்கள் **Spirulina, Tetraselmis** இனங்கள் என்பனவாகும். இவ்வல்காக்கள் **Skeletonema** அல்லது **Chaetoceros** இனங்கள் ஆயின் 50,000 அல்காக்கள்/மில்லி லீற்றருக்கும், **Tetraselmis** ஆயின் 10,000 அல்காக்கள்/மில்லி லீற்றருக்கும் என்ற அளவில் குஞ்சுகளுக்கு உணவாக வழங்கப்படும். (அடுத்தவாரம் தொடரும்)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் புகையிலை உற்பத்தி

பல நூற்றாண்டு காலமாக யாழ்ப்பாண மக்களின் மிக முக்கிய பணப்பயிர்களாக - மிளகாய், வெங்காயம், புகையிலை என்பன பிரசித்தி பெற்றுவந்துள்ளமை யாவரும் அறிந்ததே. இலங்கையில் புகையிலைச் செடி 1602 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரினால், அவர்களின் ஆட்சிக்காலத்



தில் (1505 - 1658) அறிமுகம் செய்யப்பட்டது.

அவ்வாறு இருந்தும் - இன்றுவரை இப்பயிர் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையாலும், அரசாங்க ஊக்குவிப்புப் போதியதாக இல்லாதபடியாலும், புகையிலையிலுள்ள நிகொட்டீன் எனும் போதைப்பொருள் உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் எனும் கருத்தாலும் புகையிலைச் செடியின் உற்பத்தி பற்றிய சமூக உணர்வும், பற்றும் குறைந்து காணப்படுகின்றது.

அத்துடன், அண்மைகால அனர்த்தங்களால் புகையிலைப் பயிர்ச்செய்கை ஆர்வமும், தனித்துவமும் குறைந்து வருகின்றது. இருந்தும் - யாழ்ப்பாணத்தில் ஓரளவு நிலைத்து நிற்கும் பயிர்ச்செய்கையாக புகையிலைச் செய்கை மட்டுமே காணப்படுகின்றது. இதற்கு அதன் பணரீதியான மதிப்பே காரணமாகும்.

விவசாயிகளுக்கு ஒரேதடவையில் பெரியளவில் வருமானம் கிடைப்பதும், புகையிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் காரணியாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் புகையிலை உற்பத்தியின் முக்கியத்துவம் என்பதை இனிப் பார்க்கலாம்.

**பணப் பயிர்**

யாழ்ப்பாண விவசாய மக்களின் செல்வச்செழிப்புக்கும், கல்வி வாய்ப்புக்களுக்கும் உரமிட்டது பணப்பயிரான புகையிலையே என்று மூத்த விவசாயிகள் இன்றும் கூறுவர்.

யாழ்.மாவட்டத்தில் 60 சதவீதமான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டதுடன் 60,000 விவசாயக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

இங்கு 19.91 சதவீதமான மக்கள் புகையிலை உற்பத்தித்துறையில் ஈடுபடுவதுடன், 20 சதவீத விவசாய வருமானத்தை ஒரு தனிப்பயிரில் இருந்து பெறுகிறார்கள்.

அதாவது, 1998 இல் 141.5 மில்லியன் ரூபா வருமானம் புகையிலைப் பயிர்ச்செய்கையில் யாழ்ப்பாணத்திற்குக் கிடைத்தது. மேலும், 1999 இல் 2685 மெற்றிக்தொன் சப்பும் புகையிலை (**Chewing Tobacco**) வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புகையிலை உற்பத்தி அண்மைக்காலமாக உயர்ந்து வருவதையும் அவதானிக்கலாம். அதாவது, 1997/1998 இல் - 555 ஏக்கரிலும், 1998/1999 இல் - 683.35 ஏக்கரிலும், 1999/2000 இல் - 950 ஏக்கரிலும் யாழ்.மாவட்டத்தில் புகையிலை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், நூற்றுக்கு சராசரியாக 60 சதமாகவும், முதிர்செடி 60 ரூபாவாகவும், உலர்த்தியபின் 120 ரூபாவாகவும் வியாபாரம் செய்யப்பட்டு விவசாய மக்களின் நாளாந்த பண வருமானம் (**Daily cash income**) பேணப்பட்டது.

**கைத்தொழில் பயிர்**

யாழ்.மாவட்டத்தில் ஆவணி மாத முடிவில் பெய்யும் மழையுடன் புகையிலை உற்பத்தி தொடங்கி, 40 நாட்கள் நாற்றாகவும், 120 நாட்கள் வயற்பயிராகவும் செய்கை பண்ணப்படுகின்றது. வைகாசிமாதம்வரை வயல் வேலைகள் முடிவுற்றபின், அறுவடைக்குப் பின்னாலான உலர்த்தல் தொழில்முறை தொடர்ந்து - புரட்டாதிமாதம் வரை நடைபெறும். இதனால், வருடம் முழுவதும் புகையிலைச் செய்கை பண்ணும் வாய்ப்பு இருப்பதனால், இது ஒரு சிறந்த கைத்தொழில் பயிராகும். (அடுத்தவாரம் தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 20/= | 30/= | 10/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 70/= | 75/= | 80/= | 170/= |
| கத்தரிக்காய் | 20/= | 20/= | 20/= | 25/= | 15/= | 15/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 60/= | 45/= | 40/= | 30/= |
| வெண்டிக்காய் | 30/= | 30/= | 20/= | 20/= | 20/= | 15/= |
| முருக்கங்காய் | 160/= | 140/= | 160/= | 160/= | 200/= | 170/= |
| கரட் | 40/= | 40/= | 60/= | 45/= | 60/= | 40/= |
| பீற்றூட் | 25/= | - | 35/= | 30/= | 30/= | 25/= |
| வெங்காயம் | 25/= | 30/= | 25/= | 25/= | 30/= | 25/= |
| பச்சைமிளகாய் | 25/= | 30/= | 30/= | 35/= | 25/= | 25/= |

# தென்னந்தோட்ட வருமான அதிகரிப்புக்கு உதவக்கூடிய ஊடுபயிர்ச் செய்கை

(சென்றவாரத் தொடர்ச்சி)

**5 வயதிற்குக் கீழ் அல்லது 25 வயதுக்கு மேற்பட்ட தென்னைகளுக்குக் கீழ் மரவள்ளி நடுதல்**

வர்க்கங்கள்:- **MU 51 CARI 555**

இடைவெளி:- 90 செ.மீ X 90 செ.மீ

நடுகைக்காலம்:- சிறுபோகம் அல்லது பெரும்போக மழை ஆரம்பத்துடன்

பசளைப் பாவனை:- மரவள்ளிக்கு மாத்திரம். தென்னைக் குத் தனியாக **APM** இடவேண்டும்.

**மேற்கட்டுப் பசளை (கிலோகிராம்/ஹெக்ரயர்)**

| பசளைவகை | நட்டு 2 ஆம் வாரம் | நட்டு 9 ஆம் வாரம் | நட்டு 17 ஆம் வாரம் |
|---|---|---|---|
| யூரியா | 84 | 84 | 84 |
| செறி சுப்பர்பொசுபேற் (T.S.P) | 126 | - | - |
| மியூறியற் ஒவ் பொட்டாசு | 126 | 63 | - |



**விளைவும் மொத்த வருமானமும்**

விளைவு: 15,000 கிலோ/ஹெக்டர் (12-19 தொன் ஹெக்ரயர்)

மொத்த வருமானம்: 150,000 ரூபா/ ஹெக்ரயர் (கிலோ 10/=)

**தென்னையின் கீழ் இஞ்சி**

- வர்க்கங்கள்: உள்ளூர் இனம், சீனா இனம்
  சீனா இனம் ஏற்றுமதிக்கு உகந்தது.
- நிலத்தினைத் தென்னையைச் சுற்றிவர 2 மீற்றர் (6அடி) சுற்று வட்டத்தினைத் தவிர்த்துச் சாதாரணமாக உழுதுவிடவும்.
- தனியான இஞ்சி வெட்டுத் துண்டங்களை 0.09 சதுர மீற்றர் (1சதுர அடி) நிலப்பரப்பிலும், சராசரியாக 55,000 இஞ்சி வெட்டுத்துண்டங்கள் 1 ஹெக்ரயருக்குப் போதுமானதாகும். வேர்விட்ட இஞ்சி வெட்டுத்துண்டங்கள் நாட்டுவது நலம்.
- அண்ணளவாக 1200 கிலோ இஞ்சி ஒரு ஹெக்ரயரில் நாட்டுவதற்குப் போதுமானது.
- நடுகைக் காலம் மார்ச் - ஏப்ரல் அறுவடை: டிசம்பர் ∴ ஜனவரி.

**உரப்பிரயோகம்**

தென்னை முதிர் மரக்கலவை (**APM**) உபயோ கிக்கலாம்.

**உரப்பிரயோக அளவு**

அடிக்கட்டுப் பசளையாக, ஒரு கைபிடி அளவு மாட்டெரு ஒவ்வொரு இஞ்சித்துண்டத்தினையும் சுற்றிவர இடலாம். 1 ஆவது மேற்கட்டுப் பசளையை (நாட்டிய பின்பு 11/2 மாதங்கள்) 10 கிராம்/ கன்றுக்கு.

2 ஆவது மேற்கட்டுப் பசளையை (நாட்டிய பின்பு 3 மாதங்கள்) 20 கிராம்/ கன்றுக்கு.

3 ஆவது மேற்கட்டுப் பசளையை (நாட்டிய பின்பு 5-6 மாதங்கள்) 25 கிராம்/கன்றுக்கு.

தேவையாயின் தும்புத்தூளை அல்லது கைக்கோலினைப் பத்திரக் கலவையாகப் பாவிக்கலாம்.

விளைவு: சராசரி 6 மெற்றிக்தொன்/ ஹெக்டயர் தென்னந்தோட்டம்.

**தென்னையின் கீழ் வற்றாளை**

பருவம்: சிறுபோகம் அல்லது பெரும்போகம்

வர்க்கங்கள்: வாரியப்பொல பெந்தோட்ட **A' CARI 9**

இடைவெளி: 64 செ.மீ x 24 செ.மீ

நடுகைமுறை: வரம்புகளில் ஒவ்வொரு நிலையத்திலும் ஒவ்வொரு துண்டம்.

பசளைப்பாவனை: (கி.கி./ஹெக்ரயர்)

| சேர்க்கை | அடியுயரம் | மேற்கட்டு நட்டு 6 கிழமையின் பின்பு |
|---|---|---|
| 1) யூரியா | 60 | 60 |
| 2) அடர்சுப்பர் பொசுபேற் (T.S.P) | 120 | - |
| 3). மியூரியற் ஒவ்பொட்டாசு | 120 | 60 |

**நீள்மூஞ்சி வண்டுக்கட்டுப்பாடு**

வேர்கள் தடிப்படையும்போது, பேர்லேன் 25% கரையும் தூள் 7-9 கி.கி / ஹெக்ரயர் விசிறுக.

**விளைவும் மொத்த வருமானமும்**

விளைவு:- 5250 கி.கி/ ஹெக்ரயர்

மொத்த வருமானம்: 52,500/= ஹெக்ரயர் (கிலோ 10/=)

**தென்னையின் கீழ் நிலக்கடலை**

பருவம்: பெரும்போகம், சிறுபோகம்

வர்க்கங்கள்: நம்பர் 45, x - 14, 1-1

இடைவெளி: 50 செ.மீ x 15 செ.மீ

நடுகைக்காலம்: பெரும்போக, சிறுபோக மழையுடன்.

**நடுகை முறை**

அ) ஒரு நிலையத்தில் 2-3 விதைகளை ஊன்றிவிடுக.

ஆ) நட்டு 14 நாட்களின் பின்பு, ஒரு தாவரம் நிலையத்தில்விட்டு மீதியை அகற்றுக.

**பசளைப் பாவனை:- அடியுரம்**

(நைதரசன்) யூரியா 15 கிலோ/ஹெக்ரயர்

சப்போஸ் பொசுபேற் 62 கிலோ/ஹெக்ரயர்

மியூரியற் ஒவ் பொட்டாசு 45 கிலோ/ஹெக்ரயர்

**மேற்கட்டுரம்**

பூக்கும்போது தாவரங்கள் வெளிறிக் காணப்பட்டால் யூரியா, 14 கிலோ/ ஹெக்ரயருக்கு இடுக.

**விளைவும், மொத்த வருமானமும்:**

விளைவு: 1000 1500 கிலோ/ஹெக்ரயர்

வருமானம்: 20,000 ரூபா - 30,000 ரூபா ஹெக்ரயர் (கிலோ 20/=)

**தென்னையின் கீழ் பயறு**

பருவம்: சிறுபோகம் அல்லது பெரும்போகம்

வர்க்கங்கள்: **Selection** 77 (செலெக்ஷன் 77), **MI** - 5

இடைவெளி: 30 செ.மீ. x 75 செ.மீ.

நடுகை முறை: ஒரு நிலையத்தில் 2 விதைகளை ஊன்றி, அவை முளைத்து 2 வாரங்களின் பின்பு, நிலையத்திற்கு ஒரு தாவரத்தினைவிட்டு ஏனையவற்றினை அகற்றுக அல்லது தூவியும் நாட்டலாம். (உழுததன் பின்பு)

**பசளைப் பாவனை**

அடியுயரம்: யூரியா - 15 கிலோ/ ஹெக்ரயர்

சப்போஸ் பொசுபேற் - 62 கிலோ/ ஹெக்ரயர்

மியூரியற் ஒவ் பொட்டாசு - 45 கிலோ/ ஹெக்ரயர்

**மேற்கட்டு உரம்**

**விளைவும் மொத்த வருமானமும்**

| வர்க்கங்கள் | விளைவு கிலோ/ஹெக்ரயர் | மொத்த வருமானம் (20/= கிலோ) ரூபா/ஹெக்ரயர் |
|---|---|---|
| பொம்பே | 750 | 15,000/= |
| MI | 1000 | 20,000/= |

**தென்னையின் கீழ் சிறகவரை**
**வர்க்கங்கள்: UBS - 122, L B NC - 33**

| வர்க்கங்கள் | காய்நிறம் | அறுவடை செய்ய எடுக்கும் காலம் |
|---|---|---|
| UBS - 122 | ஊதா | 87 நாள் |
| LBNC - 33 | பச்சை | 87 நாள் |

| வர்க்கங்கள் | காய்நீளம் | விளைவு கி.கிராம் / ஹெக்ரயர் |
|---|---|---|
| UBS - 122 | 28.9.செ.மீ. | 1500 - 2000 |
| LBNC - 33 | 18.9.செ.மீ. | 1500 - 2000 |

பூக்கும் பருவத்தில் யூரியா 14 கிலோ / ஹெக்ரயருக்கு இடுக.

**விளைவும் மொத்த வருமானமும்**

விளைவு: 1200 கிலோ/ ஹெக்ரயர்

மொத்த வருமானம் 24000 ரூபா/ஹெக்ரயர்

**தென்னையின் கீழ் கௌபீ**

பருவம்: சிறுபோகம் அல்லது பெரும்போகம்.

வர்க்கங்கள்: **MI** 35, பொம்பே கௌபீ.

இடைவெளி: 30 செ.மீ. X 15 செ.மீ.

**நடுகை முறை**

ஒரு நிலையத்தில் 2-3 விதைகளை நடுக. முளைத்து 2 வாரங்களின் பின்பு, வீரியமான ஒரு தாவரத்தினை ஒரு நிலையத்தில்விட்டு ஏனையவற்றை அகற்றுக.

## நீர்த்தாங்கிகள் சந்தைக்குள் டொல்பினின் நல்வரவுப் பாய்ச்சல்




இலங்கையில் வீட்டுப்பாவனைக்கான சுத்தமான நீரை கிடைக்கச் செய்வதில் நீர்த்தாங்கிகள் பெரும் பங்காற்றி வருகின்றன.

சுத்தமான நீர் மக்களுக்குக் கிடைப்பதனால், அவர்களின் வாழ்க்கைத்தரம் பெரிதும் உயர்ந்துள்ளது. அண்மைக்காலம்வரை ஒரு ஆடம்பரப்பொருளாகக் கணிக்கப்பட்ட நீர்த்தாங்கி, இப்பொழுது ஒரு அத்தியாவசியப் பொருளாகமாறியதுடன், புதிதாக அமைக்கப்படும் வீடுகளில் ஒரு பொதுத்தேவையாகவும் மாறியுள்ளது.

இவ்வாறான சூழலைக் கருத்திற்கொண்டு சென். அன்ரனீஸ் இன்டஸ்ரீஸ் குறூப் மக்களுக்கு நன்கு பரீட்சையமான "டொல்பின்" என்ற வர்த்தகச்சின்னத்தில் பல்வேறு வகையான நீர்த்தாங்கிகளை அறிமுகம் செய்துள்ளது.

டொல்பின் நீர்த்தாங்கிகளானது, நீண்டபாவனைக் காலத்தினையும், சுகாதார நலன்களையும் கருத்திலெடுத்து வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்நீர்த்தாங்கிகளானது தனி மனித வீட்டுப்பாவனைகளில் இருந்து, கைத்தொழில் நிறுவனங்களின் பாவனைவரை தேவையான கொள்கலன் அளவு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. 450, 500, 1000, 1500, 2000, 2500, 3000, 4000, 4500, 6000 லீற்றர் கொள்வனவுகளில் தற்பொழுது நாடுபூராகவும் தற்பொழுது கிடைக்கின்றன.

டொல்பின் நீர்த்தாங்கிகள் - நீரைமட்டும் சேமித்து வைப்பதற்கு மட்டுமல்ல- பழரசம், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்தவும், அதேவேளை இரசாயன எதிர்ப்புச் சக்தி சேர்க்கப்பட்ட பல அடுக்கு டொல்பின் நீர்த்தாங்கிகள் சந்தையில் கிடைக்கின்றன.

மேலும் - டொல்பின் நீர்த்தாங்கிகள் உயர்தர றொட்டோ வடிவமைப்பிலான பியுஸன் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டமையே இந்நீர்த்தாங்கிகளின் நீண்டபாவனைக் காலத்தின் இரகசியமாகும்.

அகன்ற வாய்களைக்கொண்ட டொல்பின் நீர்த்தாங்கிகளைச் சுத்தம்செய்வது இலகுவானது. அத்துடன் - தூசுகள், பூச்சிகள், சிறு பிராணிகள் - நீர்த்தாங்கிகளுக்குள்ளே உட்புகுந்து நீரினை அசுத்தப்படுத்தாதவாறு மூடிகளை இறுக மூடப்படக்கூடியவாறு மூடிகள் புரிகளைக் கொண்டுள்ளன.

சென்.அன்ரனீஸ் இன்டஸ்ரீஸ் குறூப் "டொல்பின்" நீர்த்தாங்கிகளை நாடெங்கிலுமுள்ள பிரபல கனரகப்பொருள் வர்த்தகர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## தொழில் வங்கி



| நிறுவனம் | கிழக்கு பல்கலைக்கழகம் | கெயர் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் | தெற்காசிய - இலங்கை கூட்டுறவுத்திட்டம் |
|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவி | வருகை விரிவுரையாளர் (சமூகவியல்) | 1) திட்ட இணைப்பாளர் 2) முகாமையாளர் 3) களப்பிரதிநிதிகள் | ஊடகவியல் மற்றும் தொடர்பாடல் அலுவலர் |
| அடிப்படைத் தகுதிகள் | குறைந்தது B.A.(Upper second) | முன்னனுபவம் ~ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக சான்றிதழ் | தொடர்பாடலில் பட்டச்சான்றிதழ் |
| விண்ணப்ப முடிவு திகதி | 30.04.2003 | 10.04.2003 | 10.04.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால்
வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று

- திருக்குறள்.

# நமது நோக்கு

## பழியும் நோக்கமும்!

அண்மைக்காலமாக கிழக்குக் கடற்பகுதியில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் - அமைதி முயற்சிகளைத் திட்டமிட்டுக் குழப்புவதற்கு சில சக்திகள் முயற்சி செய்வதான சந்தேகத்தை வலுப்படுத்தி வருகின்றன.

கடந்த மாதம் சீனநாட்டு மீன்பிடி ட்ரோலர் ஒன்று தாக்கப்பட்ட சம்பவமும், 'லங்கா முடித' கப்பல் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதும் - கடற்பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி - அதன் மூலமாக உருவாகும் குழப்பத்தில் குளிர்காய முனைபவர்கள் பற்றிய அச்சுறுத்தலை தோற்றுவித்திருக்கின்றன.

இந்த இரண்டு சம்பவங்களையும் விடுதலைப் புலிகளே மேற்கொண்டதாக கடற்படைத் தரப்பில் முதலில் குற்றச்சாட்டுக்கள் எழுந்ததும், விடுதலைப் புலிகள் அவற்றினை நிராகரித்ததுடன் தமக்கும் இந்தச் சம்பவங்களுக்குமிடையே எத்தகைய தொடர்பும் இல்லையென அறிவித்தும் விட்டனர்.

தொடர்ந்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் விசாரணைகளிலும், அறிக்கைகளிலும் - இந்தத் தாக்குதலுடன் வேறு ஆயுதக்குழுவொன்று சம்பந்தப்பட்டிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீன ட்ரோலர் தாக்கப்பட்ட சம்பவம் எவ்வாறு கடற்படையின் கண்காணிப்புத் தீவிரம் பெற்றுள்ள 'வருண கிரண' நடவடிக்கை வலயத்திற்குள் நடைபெற்றதோ -

அதேபோன்றே 'லங்கா முடித' கப்பல் மீதான தாக்குதலும் - கடற்படையின் பலமிகுந்த திருமலைத் துறைமுகத்திலிருந்து வடக்கேயுள்ள கடற்பகுதியில் நடைபெற்றிருக்கின்றது.

இந்த இரண்டு தாக்குதல்களும் - நடாத்தப்பட்ட பகுதிகள் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் நடமாட்டமுள்ள பகுதிகளாகவும் இனங்காட்டப்படுவதைக் கொண்டு - இத்தாக்குதல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டதாகப் படைத்தரப்பு அவசரகதியில் அறிவித்தது.

ஆனால் - விடுதலைப் புலிகளின் மறுப்பும், கண்காணிப்புக் குழுவினரின் அறிவிப்பும் - இத்தாக்குதல்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வகையான சம்பந்தமும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியபின்னர் -

இத்தாக்குதல்களின் நோக்கம் பற்றியும், இவற்றல் ஈடுபடுவோர் யார் என்பதிலும் அனைவரின் கவனமும் குவிந்துள்ளது.

ஏனெனில் - போர்நிறுத்தத்தின் பின்னர் - பல தடவைகள் முரண்பாடுகளும், குழப்பங்களும் ஏற்பட்டது கடற்பரப்பில்தான் என்பதோடு -

அத்தகைய நிகழ்வுகள் அமைதி முயற்சிகளைப் பாதித்த தீவிரமும் இந்தக் கவனக் குவிப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளன.

இத்தாக்குதல்களின் மூலமாக - தாக்குதல்களை நடாத்தியோர் எதனைச் சாதிக்க முற்படுகின்றனர் என்ற கேள்வியானது - அமைதி முயற்சிகளுக்கான அச்சுறுத்தல் கடற்பிராந்தியத்திலிருந்து எழுவதை இன்னமும் தணித்து விடவில்லை என்பதோடு -

அரசாங்கத்தரப்பும், விடுதலைப் புலிகளும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இணைந்து - போர் நிறுத்த ஒப்பந்தத்தில் புதிய வரைபுகளைச் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை எதிர்ப்போரின் செயற்பாடுகள் பற்றியதுமான சந்தேகத்தையும் வளர்த்துச் செல்கின்றது.

கடற்பகுதியை - நெருக்கடிமிக்க, பதற்றமிக்க ஒரு களமென வைத்திருப்பதற்கும், விடுதலைப் புலிகளை சீண்டுவதற்கும், வலிந்து - பழிகளைப் போட்டுக்கொள்வதற்குமாக - எவரெவர் ஆர்வமாக இருக்கின்றனர் என்பது கண்டறியப்படுவதுடன், அவர்கள் வெளிப்படுத்தப்படுவதுமே - கடற்பரப்பு பகுதியிலும் அமைதி நிலைத்திருக்க உதவும்.

போர் நிறுத்தத்தைக் குழப்பி - யுத்தப் போக்கிற்கு வழிசமைக்க முயலும் சக்திகளும், விடுதலைப் புலிகள் மீது அடாது பழியை - தாக்குதல் நடந்த சில கணங்களுக்குள்ளேயே வெளியிட்டு வரும் தரப்புக்களும் - தோலுரித்துக் காட்டப்படும்போதே - இந்தச் சூதின் உண்மையும் வெளிவரும்.

# யாழ்ப்பாண அபிவிருத்தி பற்றி கலதாரி ஹோட்டேலில் ஆய்வு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகப் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு கலதாரிக் ஹோட்டேலில் இருநாட்கள் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

மார்ச் 31, ஏப்ரல் முதலாம் திகதிகளில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலைப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சும், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து மேற்கொண்டிருந்தன.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண அபிவிருத்தி தொடர்பாக முன்னர் ஆய்வு செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம், யாழ். அரச அதிபர் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மிகவும் ஆடம்பரமானமுறையில் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொது அமைப்புக்களைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகவும் தெரியவருகிறது..

# சுகாதார சேவைகளை நாடும் மக்களுக்கு கண்ணியமான, அன்பான சேவையாற்றுங்கள்!

### பரிசாரகர் பயிற்சிநெறி ஆரம்பவிழாவில் உரை

(நவிண்டில்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பரிசாரகர்களுக்கான பயிற்சிநெறி கடந்த திங்கட்கிழமை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் சுகாதாரக் கல்வி நிலையத்தில் ஆரம்பமாகியது. வைத்திய கலாநிதியும், சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளருமான உமா சிவபாதசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்த சிறப்பு விருந்தினர் உமா சிவபாதசுந்தரம் தமதுரையில் -

கடந்தகாலப் போர் அனர்த்தங்களால் சுகாதார சேவைகளைப் பெறமுடியாது அல்லலுற்ற மக்களுக்கு - நீங்கள் சிறந்த, கண்ணியமான, அன்பான சேவை வழங்கவேண்டுமென அவர் பயிற்சியாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் 34 பயிலுநர்கள், பல்வைத்திய நிபுணர், குழந்தைகள் நோயியல் நிபுணர், நிர்வாக உத்தியோகத்தர், சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

### இந்து சமய விவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட

# உலக இந்து மாநாட்டையொட்டிய பண்ணிசை, பேச்சுப்போட்டி முடிவுகள்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால், யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி ஆகியவற்றின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் -

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் கொழும்பில் நடைபெறும் தேசியமட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். தேசிய மட்டத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி பண்ணிசைப்போட்டியும், 11 ஆம் திகதி பேச்சுப்போட்டியும் - பம்பலப்பிட்டி, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தேசியமட்டப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும், மாணவிகள் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியிலும் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9 ஆம் திகதி மாலை, மாணவர்கள் தமது தங்குமிடங்களுக்கு வந்துசேரவேண்டும் என்றும், மாவட்ட ரீதியாக நடைபெற்ற போட்டிகள் ஒவ்வொன்றிலும் முதல் ஆறு இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு - யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநில மாநாட்டில் பரிசுகள் வழங்கப்படும் என்றும் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்.

கீழ்ப்பிரிவில - ப.உபேந்திரா (யாழ்.மத்திய கல்லூரி), ப.டிலானி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கு.கோபிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), யோ.கார்த்திகா (மகாஜனக் கல்லூரி), ச.கீரன் (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), சி.பரிபூர்னா (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)

மேற்பிரிவு - கு.குருபரன் (யாழ்.இந்துக்கல்லூரி), தே.டசிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செ.சுரேஸ்கரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), க.கலைவாணி (வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்), போ.சித்திரா (கொக்குவில் இந்துக்கல்லூரி), து.துர்காஜினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

மத்தியபிரிவு - ம.மயூரா (வேம்படி மகளிர் கல்லூரி), க.கலையரசி (அச்சுவேலி புனிததிரேசா மகா வித்தியாலயம்), தெ.ஹர்சன் (யாழ்.மத்தியகல்லூரி), யோ.சுதாகரன் (யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), க.விஜயராஜ் (யாழ். மத்தியகல்லூரி), ம.விஜிதரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்)

#### பண்ணிசைப் போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு - தெ.பவனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்), சே.கோபிகா (மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை), தே.விதுர்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.பரிபூர்னா (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), சு.அம்பிகா (இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்), ஜெ.சந்துருகேசன் (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)

மத்தியபிரிவு - கு.ஜெகதீசன் (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), ம.தயாபரன் (யாழ்.மத்திய கல்லூரி), ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோரியல் கல்லூரி), வி.ஜிவிகா (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), த.கவாஸ்கர் ( யாழ். இந்துக்கல்லூரி), அ.அமிர்தலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

மேற்பிரிவு - ந.தனசொரூபி (கொக்குவில் இந்துக் கல்லூரி), கோ.சிவராஜா (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சு.கபிலன் (சுன்னாகம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), வி.நளாஜினி ( யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), மு.கௌசலா (யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), பு.சுகன்யா (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி)

# வீதியை மூடி வளரும் பற்றைகள்; பருத்தித்துறை வீதியில் பாதிப்பு!

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் அநேகமான இடங்களில் வீதிக்கு இருபுறமும் பற்றைகள் வளர்ந்துள்ளதால், பொதுமக்கள் போக்குவரத்தின்போது பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

நீர்வேலி, சிறுப்பிட்டி, வல்லை போன்ற பகுதிகளில் வீதியின் இருபுறத்திலும் முள்ளுப்பற்றைகள், கருவேல் மரங்கள் வளர்ந்துள்ளன. இதனால் வீதியில் போக்கு வரத்துச் செய்யக்கூடிய இடமும் குறுகியுள்ளது.

வீதிகளில் வாகனங்களுக்கு வழிவிடும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வோரும், பாதசாரிகளும் இந்தப் பற்றைகளுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால், மேற்படி பகுதிகளில் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளபோதும், பற்றைகளை அகற்றுவதற்கு அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உயிரிழந்த மீனவர் இறுதிச்சடங்கு; கலந்துகொள்ள சீனக்குழு வருகை!

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சீன ட்ரோலரில் இருந்து மரணமான மீனவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காகச் சீனாவிலிருந்து மீன்பிடித்துறை அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

சீனாவின் பியூஜியன் மாகாணத்திலிருந்து கடலியல் மீனபிடித்துறைப் பிரதிப்பணிப்பாளர் தலைமையில் வந்துள்ள இந்தக் குழுவினர், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

# அமைச்சர் கரு ஜெயசூரிய புலிகளின் முகாமுக்கு விஜயம்

மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய மட்டக்களப்பு மாவட்டம் கரடியனாறில் புலிகளின் முகாமுக்குச் சென்று பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரடியனாறு, இலுப்பையடிச்சேனை ஆகிய பகுதிகளுக்கு மின்சார விநியோகத்தை வழங்குவதற்கான திட்டத்தை ஆரம்பித்துவைக்க அங்கு சென்றபோதே அமைச்சர் - புலிகளின் முகாமுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது புலிகள், தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளில் முழு நம்பிக்கை வைதத்திருப்பதாகத் தெரிவித்ததாகவும், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்ததாகவும் - அமைச்சர் கரு ஜெயசூரிய கொழும்புச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# உடல் உறுப்புக்களைப் பெற சிறுமிகள் கடத்தப்பட்டனரா?

(நேற்றைய தொடர்ச்சி)

பல இடங்களில் அநாதைப் பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கடத்தி வருகின்றார்கள். சில அநாதை மடங்களிலிருந்து சிறுமிகள் கடத்தி வரப்படுகின்றார்கள். பின் தங்கிய கிராமங்களிலிருந்து வேலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கடத்தி வருவதாகவும் பொது மக்கள் கூறினார்கள்.

சிறுமிகளை ஏன் கடத்துகின்றார்கள் என அறிய முற்பட்டபோது, நாம் அறியாத சில தகவல்களை உறுகொடவத்தையில் சமூகநலப் பணிகளில் ஈடுபடுபவர் ஒருவர் சொன்னார்.

சிறுமிகள் விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அத்தோடு பாலியல் குறும்படங்கள் எடுப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். அதன் பின்னர் சிறுநீரகங்கள், கண்கள், உறுப்புக்கள் அகற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் சந்தேகம் தெரிவித்தார். அதும்ட்டுமல்ல, உறுகொடவத்த தொடர்மாடி வீட்டிற்கு முக்கிய தனியார் வைத்தியசாலை இலச்சினை பொறிக்கப்பட்ட வாகனங்கள் வந்து செல்வதாகவும் அவர் சொன்னார். இதனால்தான் அவர் தனது கருத்தைத் திடமாகச் சொல்கிறார் என என்னால் ஊகிக்க முடிந்தது.

## நேரடி றிப்போர்ட்

இது இவ்வாறிருக்க, அண்மையில் இலங்கை மற்றும் அயல்நாட்டு கூட்டு முதலீட்டில் உருவான உலகப் புகழ்பெற்ற வைத்தியசாலை விளம்பரம் ஒன்றைச் செய்திருந்தது. கண்,சிறுநீரகம் போன்றவை தேவைப்படுவதாகவும், அவற்றுக்குப் பல இலட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் அறிவித்திருந்தது. சிறுநீரகத்திற்கு ஏழு இலட்சம் கொடுக்கவும் தயாராக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்படியானநிலை இருந்தால், பாதாள உலகக் குழுக்கள் சுறுசுறுப்படையத்தானே செய்வார்கள்.

இலங்கையிலே சட்டவிரோதச் செயல்களும், பாலியல் பலாத்காரங்களும், கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்துள்ளன. இதனைத் தடுக்க வேண்டியவர்களே உடந்தையாக இருக்கும்போது மக்களை யார்தான் காப்பாற்றுவார்கள்.

தற்போது உறுகொடவத்த சம்பவம் வெளிவந்ததைத் தொடர்ந்து, பல பெற்றோர் தமது காணாமற்போன பிள்ளைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காகப் பொலிஸ் நிலையங்களை நோக்கிச் செல்கின்றனர்.

இக்கட்டுரை எழுதும்போது கிடைத்த செய்தி ஒன்றையும் இங்கு தர முற்படுகின்றேன். தொடர்மாடியில் கைது செய்யப்பட்ட பெணமணியின் மகளுக்குப் பிரபல வைத்தியசாலைகளுடன் நல்ல தொடர்பு இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. தொடர்மாடி வீட்டிற்கு முக்கிய வைத்திய நிபுணர்களும் வந்து சென்றுள்ளனராம். அதுமட்டுமல்ல, பொலிஸ் வட்டாரங்களுடன் தொடர்புடையவர்களுடன், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெணமணியும் நின்று எடுத்த புகைப்படங்களும் பொதுமக்களிடம் சிக்கியுள்ளதாம். உறுகொடவத்தைப் பகுதியிலுள்ள வீட்டைப் போன்று கொலன்னாவைப் பகுதியிலும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் வீடொன்று இருப்பதாகப் பொதுமக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனராம்.

இதுபோன்ற சட்டவிரோதச் செயல்கள் தலைநகரில் பல இடங்களில் நடைபெறுகிறதாம். உறுகொடவத்தைச் சம்பவத்தில் அரசியல்வாதிகள், மருத்துவர்கள், பாதாள உலகக்குழுக்கள், மதகுருமார் போன்றவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

## கொழும்பிலிருந்து — உதரன்

மக்கள் இப்போது பொலிஸாரை நம்பத தயாராயில்லை. உறுகொடவத்தைத் தொடர்மாடி மக்களிடம்- பல தடயப்பொருட்கள் சிக்கியுள்ளன. அவற்றை அவர்கள்- பொலிஸாரிடம் கொடுக்க மறுக்கின்றனர். நீதிமன்ற நீதிவான் ஒருவர் மூலமாகவே ஒப்படைக்க விரும்புகின்றனர். மக்களால் கண்டுபிடிக்கப்பட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நீதி விசாரணை- நடுநிலையாக நடைபெறும் என்ற நம்பிக்கை எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. நீதியான விசாரணை நடைபெறும் என அரசு கூறுகிறது. இலங்கை மக்கள் பல நீதி விசாரணைகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். இன்னமும் மக்கள்- செம்மணிப் புதைகுழி விவகாரத்தை மறந்துவிடவில்லை. அது மட்டுமா, இன்னும் பற்பல விசாரணைகள்... நம்பிக்கை இழந்த நிலையில் மக்கள் உள்ளனர்.

உறுகொடவத்தைத் தொடர்மாடியில் சிறுமி கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த வீட்டில் உள்ள முக்கிய தடயப் பொருட்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அப் பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்தியவர்கள் கடத்தலில் ஈடுபட்ட பெண்மணியினது முக்கிய ஆதரவாளர்களாம். அந்தப் பெண்மணிக்கு ஆதரவாக இருக்கும் ஆளும் கட்சி அரசியல் வாதியின் ஆதரவாளர்களே பொதுமக்களின் போர்வையில் வீட்டில் உள்ள தடயப் பொருட்களை எரித்த உண்மை வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது.

இது இவ்வாறிருக்க, உறுகொடவத்தைச் சம்பவம் தொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கென உறுகொடவத்தை பௌத்த விகாரையில் அமைக்கப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுக்கு ஒரு வயோதிபர் வந்துள்ளார். அவர் மாத்தறை வெலிகம என்னும் இடத்தைச் சேர்ந்தவர். மீன் பிடிக்கும் தொழிலாளியான அவருடைய சிறுநீரகம் பழுதடைந்திருப்பதாக அவரது சிறுநீரைப் பரிசோதித்த சூத்திரதாரிப் பெண்மணி அவருடைய சிறுநீரகத்தை மாற்ற 1இலட்சத்துக்கு மேல் வேண்டும் என்றும் கூறியுள்ளார். வயோதிபர் கூறுகையில், நான் முற்பணமாக 6000ரூபா கொடுத்துள்ளேன். இந்தப் பெண்மணியின் புகைப்படம் பத்திரிகையில் வெளியானதைத் தொடர்ந்து உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்காக இங்கு வந்துள்ளேன். என்று கூறியுள்ளார். அவர் பல திடுக்கிடும் தகவல்களைக் கூறியுள்ளார். இன்னும் சில நாட்களில் இன்னும் பல உண்மைகள் வெளிவரலாம் உண்மைகளை மூடி மறைக்க பல தரப்பிலிருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது. ★



மானிப்பாய் லியோ கழகத்தினரால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடாத்தப்பட்ட சமாதான ஓவியக் கண்காட்சிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பசுபதிப்பிள்ளை கண்காட்சியைத் திறந்து வைப்பதையும், அருகில் லியோ கழகத் தலைவர் எஸ். ரமணன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சமாதான பாத யாத்திரையாக யாழ்ப்பாணம் வந்த வயோதிபர்!

சமாதான பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டு கொழும்பிலிருந்து ஒருவர் கால்நடையாக யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த அறுபத்து நானகு வயதுடைய எம்.டேவிட் என்பவரே இந்தச் சமாதானச் சாதனை யாத்திரையை மேற்கொண்டவராவார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்ட இவர்- பௌத்த விகாரைகளிலும், வவுனியா, கனகராயன் குளம், முகமாலை ஆகிய இடங்களிலும் தங்கி, நேற்று முன்தினம் யாழ்.வந்தடைந்துள்ளார்.

இனமத வேறுபாடின்றி நாட்டின் அனைத்து மக்களுக்கும் சாந்தி, சமாதானம் ஏற்பட்டுச் சுபீட்சமாக வாழவேண்டும் என்பதே தனது யாத்திரையின் குறிக்கோள் என அவர் கூறினார்.

தன்னை வன்னியில் வைத்து விடுதலைப்புலிகள் வரவேற்றுச் சிறப்பாக உபசரித்ததாகவும் அவர் தெரிவித்தார். தனது சமாதான யாத்திரை நினைவாக ஆரியகுளத்தில் அமைந்துள்ள நாகவிகாரைக்கும், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் குத்துவிளக்குகளை அவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ரா)

## தொலைபேசி இணைப்பு வயர்கள் திருட்டு

(நவிண்டில்)

உடுப்பிட்டி- இமையாணன் வடக்குப் பகுதியில் வீடுகளுக்கான தொலைபேசி இணைப்பு வயர்கள்- சில விஷமிகளால் இரவு வேளைகளில் திருடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் மூன்று வீடுகளுக்குச் செல்லும் தொலை பேசி இணைப்புக்கள் இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளது. இமையாணன் வடக்குப் பகுதியில் இரு வீடுகளிலும், இலக்கணாவத்தையில் ஒரு வீட்டிலும் தொலைபேசி இணைப்பு வயர்கள் திருடப்பட்டுள்ளன.

(116)

## நல்லூரில் சொற்பொழிவு

நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு 'சைவநெறி காட்டும் மனிதவிழுமியங்கள்' என்ற தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் உரை நிகழ்த்துவார்.

## வருடாந்த மகோற்சவம்

யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## எங்கே போகிறோம்...?

நேசன்

# படைப்புக்களில் கலைத்துவம்

ஒரு கலைப்படைப்பு பல காரணங்களுக்காகச் சிறப்பிக்கப்படலாம். அந்தப் படைப்பில் அடங்கியிருக்கக்கூடிய பல சிறப்புக்கள் காரணமாகவோ அல்லது அவற்றுள் ஒரு சிலவோ அல்லது ஒன்றோ ஒரு வாசகனை - ரசிகனை - பார்வையாளனை வசீகரித்துவிடமுடியும். ஒரு படைப்பில் அடங்கும் அனைத்துச் சிறப்புக்களும், அனைத்து ரசிகர்களையும் கவருமென்றோ - அனைத்து ரசிகர்களாலும் கண்டு கொள்ளப்படுமென்றோ கருதமுடியாது. அனைத்தினையும் கண்டுகொள்ள ஒரு பக்குவம் வேண்டப்படுகிறது. - இத்தகைய சிறப்புகளில் ஒன்றுதான் படைப்பொன்றில் காணப்படக்கூடிய அதன் கலைத்துவம் - கலைத்தன்மை.

ஒரு சிறுகதை என்னும் கலை வடிவத்தை எடுத்துக்கொள்ளும்போது - ஒரு பொதுவாசகனின் எதிர்பார்ப்பு அதிற்காணப்படக்கூடிய ஈர்ப்புத்தன்மை - அதன் வசீகரம்தான் - இத்தகைய வசீகரம்கூட அந்தக் கதை முழுவதிலுமோ அல்லது ஒரு பாகத்திலோ காணப்படமுடியும். அதனை வாசிக்கத் தொடங்கும் ஒருவன் இறுதிவரை அதை வாசித்து விடவேண்டுமென்ற அபிப்பிராயத்துக்கு உட்படுத்தப்படும் வகையில் அது படைக்கப்பட்டிருக்குமெனில், அதன் வெற்றியில் ஒரு பாகத்தை அது அடைந்துவிட்டதாகக் கொள்ளமுடியும். சலிப்பை ஏற்படுத்தாத வகையிலான சித்திரிப்போடு தனது நோக்கத்தைக் குறிவைத்து இறுதிவரை அந்தப் படைப்பு நகர்ந்திருக்குமெனில் அது எதிர்பார்க்கின்ற தாக்கம் வாசகனிடத்தில் விளையும். படைப்பாளி ஏற்படுத்த விரும்பும் உணர்வுத்தாக்கம் வாசகனிடத்தில் தொற்றவைக்கப்பட வேண்டுமென்றும், உள்ளுணர்வோடு பக்குவமாக உருவாக்கப்படும்போது அதுவும் சாத்தியப்படும். அது எப்படி?

இங்குதான் அதன் கலைத்தன்மை - கலைத்துவம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகிறது.

இத்தகைய கலைத்தன்மை மொழிநடையினூடாகச் சம்பவ விபரிப்பு மற்றும் சித்திரிப்புக்களில் பொதிந்திருக்கும. ஒரு தேர்ந்த கலைஞன் இதனை மிகவும் நுட்பமாகச் செய்வான்.

ஒரு ரசனைக்குரிய ரகசியத்தை மொட்டவிழ்தலாக அதன் அனுபவம் இருக்கும். அதனூடாக வாசகன் ஒரு கட்டவிழ்ந்த மகிழ்ச்சியையோ அல்லது ஒரு ஆழ்ந்த சோகத்தையோகூட உணரமுடியும். உதாரணத்துக்கு அன்ரன் செக்கோவ் எழுதிய சலிப்பு என்ற சிறுகதையில்வரும் ஒரு சம்பவச் சித்திரிப்பைப் பார்க்கலாம்.

அயோனா பொடபோஷ் ஒரு குதிரை வண்டிக்காரன். பனிகொட்டும் இரவில் வாடிக்கையாளர்களை - வண்டி கேட்டுவரும் பயணிகளை எதிர் நோக்கியபடி வண்டியில் அமர்ந்திருக்கிறான். அன்று முழுவதுமே யாருமே அவனது வண்டியை வாடகைக்கு அமர்த்தவில்லை. கடைசியில் ரயில் நிலையத்துக்குப் போகவென அவனது வண்டியை அமர்த்திப் புறப்படுகிறார்கள் சில இளைஞர்கள். குடித்துவிட்டுக் கும்மாளமிட்டபடி பயணிக்கும் அவர்களது குதூகலம் இவனுக்குள் உறங்கிய ஒரு சோகத்தைக் கிளறிவிடுகிறது. அவர்களது வயதையொத்த சிலநாட்களுக்கு முன் இறந்துபோன அவனது மகனை அவன் நினைக்கிறான். அவனைப் பற்றி அந்த இளைஞர்களிடத்தில் சொல்ல நினைக்கிறான். "என் மகன் போனகிழமை செத்துப்போனான்.." என ஆரம்பிக்கிறான். "செத்துப்போனானா? ஏன் செத்தான்..." என உபசாரத்துக்காகக் கேட்ட அவர்களிடத்தில் தொடர்ந்து அவன் சொன்னவைகளைக் கேட்கும் ஆர்வம் சிறிதும் இருக்கவில்லை. எனினும் இவன் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறான். அந்த இளைஞர்களுக்கு இவன் வண்டியோட்டும் வேகம் போதாதுபோறபடுகிறது. விரைவாய்ப் போகும்படி கெட்ட வார்த்தையில் அவனைத் திட்டுகிறார்கள்.

"குழந்தைகள்...குதூகலமாயிருக்கிறார்கள்" என்று அவனது கருணை மனம் நினைக்கிறது.

"இப்படிச் சொன்னால் விளங்காது. பிடரியில் இரண்டு வைத்துச் சொல்லி விடப்பா..." என்று சொல்கிறான் அவர்களில் ஒருவன்.

இதனையடுத்துவரும் வரிகளில் அன்ரன் செக்கோவ் தனது கலையுணர்வின் கூர்மையைப் பிரயோகிக்கிறார்.

.... அவனுக்கு விழுந்த அடிகளைக் காட்டிலும் அவர்களின் ஏச்சும், பேச்சும் காரசாரமாயிருந்தன...

என்று தொடர்கிறார் செக்கோவ். கவனித்தீர்களா... அயோனா பொடபோஷ் என்னும் கருணை மிகுந்த ஒரு தகப்பனுக்கு இரக்கமில்லாதவர்கள் செய்யும் கொடுமையைக் கைநீட்டி அவனை அடிப்பதை ஆர்ப்பாட்டமில்லாமல் நாசூக்காய்ச்சொல்லி நகர்கிறவிதம் தான் கலைத்தன்மை, கலைத்துவம்! முழுமையில் இந்தக்கதை ஒரு உன்னதமான கலைப்படைப்புத்தான். இதில் அடங்கும் உச்சங்கள் வாசகர்களின் இதய ஆழத்தை ஊசியாய்க்கீறும் இடங்கள் இன்றும் உண்டு. இவ்விதமான ஒரு கோஷமில்லாத மென்நகர்வு இந்தச் சிறுகதையின் சிறப்புக்கு மேலுமொருபடி மெருகுதருகிறது - அல்லவா....

கம்பராயணத்தில்.... "ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்...." என இராமனின் அழகைச்சொல்ல வார்த்தையின்றி கம்பன் Helpless ஆகிவிடுவதையும்.

"கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் ஜானகியை மனச்சிறையின் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி"

என மண்டோதரி புலம்புவதையும் ரசிக்கிறோமே இந்த மாதிரியான உச்சங்கள்தான் கலைத்தன்மை என்னும் பண்பின் மீது ஒளி பாய்ச்சிக் காட்டும் இடங்கள்.

கதையோ, கவிதையோ, ஓவியமோ, திரைப்படமோ எதுவானாலும் பார்வையாளனை, வாசகனை மிக நுட்பமாய்த் தொடுக்கின்ற போதுதான் அவற்றின் சிறப்பு ஒளிர்கிறது.

இந்தச் சமயத்தில் கடந்த 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற 'சினி யாத்ரா' திரைப்பட விழா ஏற்படுத்திய மனப்பதிவுகளையும் பகிர்ந்துகொள்ளும் அவசியம் தெரிகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில நல்ல சிங்களத் திரைப்படங்களுடன் 'பொன்மணி' தமிழ்த் திரைப்படமும் இந்தத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. நல்ல திரைப்படங்களுக்கான தேடலுடன் சினிமா என்னும் சக்தி வாய்ந்த ஊடகத்தின் பயனை உணர்ந்த பலரின் ஒன்று கூடலாகவும் கலானுபவப் பகிர்வாகவும் விளங்கிய இந்த விழா மிகவும் ஆழமான தாக்கங்களை - சலனங்களை நமது திரைப்பட ரசிகர்களிடத்தில் (எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதும்) தோற்றுவித்தது என்பதை மறுக்கமுடியாது. கட்புலக் கலையூடகமான சினிமாவைச் சிங்களக் கலைஞர்கள் சரியானமுறை பயன்படுத்தி உலகத்தரம் வாய்ந்த படைப்புக்களைத்தர முடிந்திருக்கிற சாத்தியப்பாடுகளின் பின்புலங்களையும் அவர்களின் பார்வைத் தெளிவின் வியப்புக்களையும் அடுத்த தொடரில் பார்க்கலாமா?

மீண்டும் சந்திப்போம்....

# ஈராக் போர்க்களம்

### பக்தாத் நோக்கிய நகர்வுக்கு

## விமானத் தாக்குதலை நம்பும் அமெரிக்கக் கூட்டுப்படைகள்



பக்தாத் செல்லும் பாதையில்....

பக்தாத் மீதான நகர்வை மேற்கொள்ளும் பொருட்டு அந்நகரைக் காவல்புரியும் ஈராக்கின் குடியரசுக் காவல்படையுடனான போரில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது. பக்தாத்திலிருந்து தென்திசையில் 50 மைல் தொலைவில் உள்ள கர்பாலா நகர் மீது, அமெரிக்கப் படையினர் கடும் தாக்குதலை நடாத்தி வருகின்றனர்.

தரைத் தாக்குதலைவிட விமானத் தாக்குதலையே அமெரிக்கப் படையினர் அதிகம் உபயோகிப்பதாக அங்குள்ள மேற்கத்தையச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மூன்று லட்சம் படையினர் ஈராக்கினுள் போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும், ஆகாயத் தாக்குதலையே அவர்கள் அதிகமாக நம்பியிருக்கின்றனர் என, அமெரிக்க மூத்த இராணுவ அதிகாரி ஜெனரல் ரிச்சட் மயர்ஸ் தெரிவித்துள்ளார். விமானத்தாக்குதல் மூலம் நாம் யூகோஸ்லாவியாவில் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்பதை நினைவிற்கொள்ள வேணடும் என இவர் சுட்டிக்காட்டினார்.

### பஸ்ரா நகர் மீதான ஆட்லறிதாக்குதல் தொடர்கிறது

ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில் நடைபெற்றுவரும் கடும் போரில் மேலும் - ஒரு பிரிட்டிஷ் படைவீரர் பலியானார். பத்துப்படையினர் காயமடைந்த நிலையில் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நகர் மீது கடும் ஆட்லறித் தாக்குதல் நடாத்தி வருவதாகத் தெரிவிக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகள் நகரிலிருந்து பதிலுக்கு கனரக ஆயுதத் தாக்குதலை ஈராக்கியர் நடத்துவதாக தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் - வட ஈராக்கில் தரையிறக்கப்பட்ட 10 பிரிட்டிஷ் படையினரை தாம் கொன்றதாக ஈராக்கியர் அறிவித்துள்ளனர். பிரிட்டிஷ் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட லான்ட்ரோவர் ஜீப் வண்டியை ஈராக்கிய படையினர் ஓட்டிச் செல்வதை அல் - ஜெசீரா தொலைகாட்சி ஒளிபரப்பியது.

## ஈராக்கிற்காகப் போரிட அரபுக்கள் அங்கு விரைவு


பலஸ்தீனர் இறுதிச் சடங்கு

ஈராக்கில் போரிடவென பலஸ்தீனத்திலிருந்து வந்த ஒருவர், சிரிய எல்லைப்பகுதியில் இறந்துள்ளார். ஹுசைன் ஒத்மன் என்றழைக்கப்படும் இந்த பலஸ்தீன அகதி இதுவரை டென்மார்க்கில் வசித்து வந்தவராவார்.

இவர் சிரியா ஊடாக ஈராக்கிற்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது, அவர் பயணித்த பஸ் அமெரிக்க அப்பாச்சே ஹெலிகொப்ரர் தாக்குதலுக்கு உள்ளானது. இதனால் படுகாயமுற்ற இவர் நேற்று பக்தாத் மருத்துவமனையில் இறந்துள்ளார்.

இதேசமயம் - பலஸ்தீனியர்கள் சிலர் தற்கொலைத்தாக்குதல்களை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்து ஈராக் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. லெபனானிலிருந்து மேலும் 36 லெபனான் வாசிகள் பஸ் ஒன்றில் ஈராக் புறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 6000 அரபுகள் எம்முடன் இணைந்து போரிடவென ஈராக் வருவதாக, ஈராக் உதவி ஜனாதிபதி யசீன் ரமடான் தெரிவித்துள்ளார்.

## படுகாயமடைந்த நிலையில் பெண் சிப்பாய் ஒருவர் மீட்பு

### காணாமற்போன செய்தியாளரும் திரும்பி வந்தார்


திரும்பிவந்த பெண் சிப்பாய்

ஒரு வாரத்திற்கு முன்னர் போரில் காணாமற்போன அமெரிக்க இராணுவ பெண் சிப்பாய் ஒருவர் கடும் காயங்களுடன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

19 வயதான ஜெசிக்கா லிஞ் என்ற பெண் சிப்பாய், விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்தபோது நஸ்ரியா பகுதியில் நடைபெற்ற ஈராக்கியரின் அதிரடி ஒன்றின் பின்னர் காணாமற் போயிருந்தார். எனினும், அமெரிக்கப்படையினர் ஈராக்கின் பாத் கட்சி அலுவலகம் ஒன்றின் மீது நடாத்திய திடீர்த் தாக்குதலில் அங்கு சிகிச்சை பெற்று வந்த இப் பெண்சிப்பாய் மீட்கப்பட்டார். மீட்கப்பட்டபோது, அவர் இருகால்களும், கையும் முறிந்த நிலையில் பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டார். அங்கு மேலும் இரு அமெரிக்கச் சிப்பாய்களின் சடலங்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் எட்டு ஈராக்கிய படையினர் பலியானதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீட்கப்பட்டதையறிந்து இவரது சொந்த ஊரான பென்சில்வேனியாவில் பெரும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் காணப்படுகின்றன. அமெரிக்கா, தனது வீரர்களை ஒருபோதும் கைவிட்டுவிடாது என இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் ஈராக்கில் காணாமற்போன பிரிட்டிஷ் பத்திரிகையாளர் மத்தியூ மக் அல்ஸ்ரர் எனபவர் தாம் நலமாக ஜோர்தான் வந்து சேர்ந்துள்ளதாக அவரது குடும்பத்தினருக்கு அறிவித்துள்ளார். ஈராக்கியர்கள் தன்னைத் தடுத்து வைத்திருந்ததாகவும் பின்னர் விடுதலை செய்ததாகவும், மத்தியூ தெரிவித்தார். ஈராக்கியர் தம்மை நன்கு பராமரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

### கொலின் பவல் துருக்கி விஜயம்

ஈராக் போரினால் அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையே எழுந்துள்ள முறுகல் நிலையைத் தீர்க்க, அமெரிக்க உள்துறை அமைச்சர் கொலின் பவல் துருக்கி சென்றுள்ளார்.

**உலகவலம்**


## தாயகத்தை விட்டு விலகும்வரை ஆக்கிரமிப்பாளரை தாக்குங்கள்

### தொலைக்காட்சியில் சதாம் அறிவிப்பு



பிசாசுகளின் தூதர்களான ஆக்கிரமிப்பாளர்கள் மீது, புனிதப் போரை நடத்தி அவர்களை அழியுங்கள், இறைவன் துணை நிற்பான் என, நேற்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தொலைக்காட்சி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். சதாமின் அறிக்கை தகவல் துறை அமைச்சர் முகமட் சயீட் அல்ஷாப்பினால் வாசிக்கப்பட்டது.


கடந்த 700 வருடகால வரலாற்றில் எமக்கு நல்லதொரு தருணம் வந்துள்ளது. உங்கள் சகோதரர்கள் போரிடுவது போல், நீங்களும் போரிடுங்கள். பஸ்ராவிலும், உம் காசிரிலும், நஸ்ரியாவிலும் என எல்லா இடங்களிலும் மோதுங்கள். எமது தாயகப்பகுதியைவிட்டு விலகுகின்றோம் என அவர்கள் அறிவிக்கும்வரை விடாது தாக்குங்கள் என சதாமின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


தணிந்துவிடாமல் எரியும் எண்ணெய்க் குதங்கள்.


சாவுகளின் துயரில் ஈராக்கியப் பொதுமகன்


வீதியைக் கடக்கவும் கையைத் தூக்கவேண்டும்.


பிரிட்டிஷ் - கூர்க்கா றெஜிமெண்டின் சோதனை.


இயல்பு வாழ்க்கை சிதைந்த பகுதியில் அமெரிக்க இராணுவ டாங்கி

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போராளி மீதான தாக்குதல் ஆணைக்குழுவில் முறையீடு

அண்மையில் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரால் தாக்கப்பட்ட போராளி நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சம்பவம் பற்றி முறையிட்டுள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி அரசியற் கடமைக்காக கொடிகாமம் சென்றிருந்தவேளை, கச்சாய் வீதியில் வைத்து மேற்படி போராளி தாக்கப்பட்டார்.

அரசியல் பணிகளை மேற்கொண்டிருந்தவேளை இப்போராளி தாக்கப்பட்டமை, மனித உரிமை மீறல் செயலாகும் என, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது. (ரா)

### கல்லுண்டாய்...

பொருத்தமான பகுதியில் இராணுவத்தினருக்குச் சாதகமான ஓர் இடத்தில் படைத்தளம் அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபடவிருப்பதாக - பாதுகாப்பு அமைச்சருடனான நேற்றைய சந்திப்பில் படைத்தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

(லி)

### சுகாதார தொண்டர்...

'சுகாதார அமைச்சரே சுகாதாரத் தொண்டருக்கு நிரந்தர நியமனத்தை வழங்கு', 'நாளும்பொழுதும் நாம் செய்த சேவைகளை ஆளும் நீங்கள் மறக்கலாமா',

'சிறு தொகை என்றாலும் அதை ஒழுங்காய் வழங்கு, இல்லையேல் நிரந்தர நியமனம் வழங்கு', 'சுகாதாரத் தொண்டரை அனாதையாய் விடாதே'

- போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் சுகாதாரத் தொண்டர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ரா,சு,9)

### பாலா...

யிலும் போர் நிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்தவே கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு ஹெக்கோனில் நடைபெற்ற பேச்சுக்களின்போது முடிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இருதரப்பும் சந்தித்துப் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்துவது என்ற தீர்மானத்தின் அடிப்படையில்தான் இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இச்சந்திப்பின்போது சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

### பிரசவ...

இத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டும் செம்பிறைச்சங்க உறுப்பினர்கள் உட்பட சிலர் காயமுற்றும் உள்ளனர்.

### அரசு மாறினாலும்...

மாகுமென ஜனாதிபதி கருதவில்லை என்றும் - பேச்சுவார்த்தை வெற்றி பெறவேண்டும் என்பதே அவரது விருப்பம் எனவும் - ஹரீம் பீரிஸ் அப்போது மேலும் தெரிவித்தார்.

### நெல்லியடி...

அதிபர் சென்றார்.

மாலை அவர் யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் வருகை தந்திருந்தார். யாழ். பொலிஸ் நிலையத்தில் அவர் பத்திரிகையாளர் சந்திப்பையும் நடத்தினார். பொலிஸாருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் வாரம் ஒருமுறை இருதரப்பினரிடையேயான சந்திப்பு இடம்பெற ஆவன செய்வதாகவும் அவர் கூறினார். (சு,ரா,லி,09)

# நகரின் மத்தியில்....

சிவாஜிலிங்கம், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது - யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான, நகரின் மத்தியில் அமைந்துள்ள நிலப்பரப்பில் இராணுவ முகாம் அமைப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அது முரணானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படுமாயின், இப்பகுதியும் இதனை அண்டியுள்ள பகுதிகளும் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதெனவும், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

யாழ். மாநகரசபை தற்போது வாடகைக் கட்டடத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கும்போது, அதற்குச் சொந்தமான நிலப்பரப்பில் இராணுவ முகாம் அமைப்பதானது, மக்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏனெனில், மாநகரசபைக்குச் சொந்தமான நிலப்பரப்பை, எதிர்காலத்தில் மாநகரசபையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இக்காணியில் நிரந்தரக் கட்டடம் அமைத்து, மீண்டும் இதே இடத்தில் மாநகரசபை இயங்க வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்பினைச் சிதைக்க முற்படக்கூடாது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் - தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை வெற்றியடைய வேண்டும் என்ற நோக்குடன், இதயசுத்தியுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாயின் - இவ்வாறு இராணுவ முகாமொன்றை மீண்டும் அமைக்க வேண்டியதில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சருக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சரும் அதிகாரிகளும்- முன்னர், கோட்டைப்பகுதி, சுப்ரமணியம் பூங்கா, பழைய நீதிமன்றம், பொலிஸ் நிலையம்,மாநகரசபைக் கட்டடம் அமைந்த பகுதி என அப்பகுதிகளையும் உள்ளடக்கிய பாரிய இராணுவ முகாம் அமைக்கவே திட்டமிட்டிருந்தோம். ஆனால் பின்னர் வந்த சில நெருக்கடிகளினால், இறுதியில் மாநகர சபைக் கட்டடம் அமைந்த பகுதியையும், சுற்றுலா விடுதி அமைந்திருந்த நிலப்பரப்பையும் தெரிவு செய்து இராணுவ முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டோம் எனத் தெரிவித்தனர்.

ஆனால் - அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இராணுவம் குறிப்பிடும் சில பகுதிகளும் கூட, மீளவும் மக்கள் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பகுதிகளே என்பதை வலியுறுத்தினர்.

இதையடுத்து- தற்போது அப்பகுதிகளில் நடைபெற்றுவரும் முகாம் அமைக்கும் பணிகள் அனைத்தையும் இடைநிறுத்துவதாக பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் புதியதொரு பகுதியில் இந்த முகாம். அமைக்கப்படலாம் எனவும் அங்கு படைத்தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் 9 ஆம திகதியன்று - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி பகுதிகளுக்கு நேரடியாக வந்து - நிலைமையை ஆராயவிருப்பதாக- கூட்டமைப்பு பிரமுகரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

இதன்போது -பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும்,இராணுவத்தளபதி லயனல் பலகல்லவும், யாழ். பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் வருகைதருவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# க.பொ.த. உயர்தர பரீட்சை நேர அட்டவணை

| திகதி | பாடம் | நேரம் |
|---|---|---|
| 21.04.2003 | இணைந்த கணிதம் - I | 09 - 12 |
| | உயிரியல் - I | 13 - 15 |
| | பொருளியல் - I | 13 - 16 |
| 22.04.2003 | உயிரியல் - II | 09 - 12 |
| | பொருளியல் - II | 09 - 12 |
| | சங்கீதம், கீழைத்தேயம் - I | 13 - 16 |
| | நாட்டியம் - பரதம் - I | 13 - 16 |
| | சங்கீதம் - கர்நாடகம் - I | 13 - 16 |
| 23.04.2003 | இணைந்த கணிதம் - II | 09 - 12 |
| | நாட்டியம் - பரதம் - II | 09 - 12 |
| | விவசாய விஞ்ஞானம்- I | 13 - 15 |
| 24.04.2003 | கணக்கியல் - I | 09 - 12 |
| | சங்கீதம் - கீழைத்தேயம் - II | 13 - 16 |
| | சங்கீதம் - கர்நாடகம் - II | 13 - 16 |
| 25.04.2003 | பௌதிகவியல் - I | 09 - 11 |
| | கணக்கியல் - II | 09 - 12 |
| | விவசாய விஞ்ஞானம் - II | 14 - 17 |
| 26.04.2003 | பௌதிகவியல் - II | 09 - 12 |
| | அளவையியலும் விஞ்ஞானமுறையும் - I | 13 - 16 |
| 28.04.2003 | தமிழ் - I | 09 - 12 |
| | அளவையியலும் விஞ்ஞானமுறையும் - II | 13 - 18 |
| 29.04.2003 | தமிழ் - II | 09 - 12 |
| | மனைப்பொருளியல் - I | 13 - 16 |
| 30.04.2003 | இரசாயனவியல் - I | 09 - 11 |
| | மனைப்பொருளியல் - II | 13 - 16 |
| 02.05.2003 | இரசாயனவியல் - II | 09 - 12 |
| | வணிகக்கல்வி - I | 14 - 17 |
| 03.05.2003 | பொது ஆங்கிலம் - I | 09 - 12 |
| | பொது ஆங்கிலம் - II | 13 - 15:30 |
| 05.05.2003 | (இந்திய) வரலாறு - II | 09 - 11 |
| | (இந்திய) வரலாறு - I | 11 - 12 |
| | (ஐரோப்பிய) வரலாறு - II | 09 - 11 |
| | (ஐரோப்பிய) வரலாறு - I | 11 - 12 |
| | இந்துநாகரீகம் - I | 13 - 16 |
| 06.05.2003 | வரலாறு - I | |
| | பகுதி - II | 09 - 11 |
| | பகுதி - I | 11 - 12 |
| | வணிகக்கல்வி - II | 13 - 16 |
| | பகுதி - II | 13 - 15 |
| | பகுதி - I | 15 - 16 |
| 07.05.2003 | பொது சாதாரணப் பரீட்சை | 09 - 11:30 |
| | புவியியல் - I | 13 - 16 |
| 08.05.2003 | புவியியல் - II | 09 - 12 |
| | பகுதி - II | 09 - 11 |
| | பகுதி - I | 11 - 12 |
| | இந்துநாகரீகம் - II | 13 - 16 |
| 09.05.2003 | கணிதம் - I | 09 - 12 |
| | உயர் கணிதம் - I | 09 - 12 |
| | புவியியல் - III | 16 - 17 |
| | பகுதி - II | 14 - 16 |
| | பகுதி - I | 16 - 17 |
| 10.05.2003 | ஆங்கிலம் - I | 13 - 16 |
| 12.05.2003 | கணிதம் - II | 09 - 12 |
| | உயர்கணிதம் - II | 09 - 12 |
| 13.05.2003 | அரசியல் மூலதத்துவம் - I | 09 - 12 |
| | பகுதி - II | 09 - 11 |
| | பகுதி - I | 11 - 12 |
| | ஆங்கிலம் - II | 13 - 16 |
| 17.05.2003 | அரசியல் மூலதத்துவம் - II | 09 - 12 |
| | பகுதி - II | 09 - 11 |
| | பகுதி - I | 11 - 12 |
| | நாடகமும் அரங்கியலும் - I | 13 - 16 |
| 19.05.2003 | வணிகப்புள்ளிவிபரவியல் - I | 09 - 12 |
| | நாடகமும் அரங்கியலும் - II | 09 - 12 |
| | இந்துசமயம் - I | 13 - 16 |
| | கிறிஸ்தவம் - I | 13 - 16 |
| 20.05.2003 | வணிகப்புள்ளிவிபரவியல் - II | 09 - 12 |
| | நாடகமும் அரங்கியலும் - III | 09 - 12 |
| | இந்து சமயம் - II | 13 - 16 |
| | கிறிஸ்தவம் - II | 13 - 16 |

# வரதன் குழு...

வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் இராணுவத்துடனும் விசேட அதிரடிப்படையினருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதோடு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும், புலனாய்வுச் செயற்பாடுகளிலும் பங்கேற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரதன் என அழைக்கப்பட்ட இவர், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் 2001 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரி தன்னிடமிருந்த பிஸ்ரலினால் மிக நெருக்கத்தில் வைத்து இவரைச் சுட்டுள்ளார்.

ஆரையம்பதியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்கு முன்பாக, இவரது குழுவினர் தனியே முகாம் அமைத்து இயங்கிவந்தனர். முன்னாள் ரெலோ உறுப்பினரான இவர், ஆரையம்பதிப் பகுதியில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாலும் பொதுமக்கள் பலரைக் கொன்றதாலும் ரெலோ இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்டிருந்தார்.

(16)

இணைந்த கணிதம்
A/L. 2004
★ தொகையீடு
★ தள விசைகள்
ஆரம்பம் :- 03-04-2003
நேரம் :- 6.30 pm
இடம் :- கோவில் வீதி,
நல்லூர் (கந்தன் கருணை)
by. M. ராஜன் (சி-737)

### திருத்தம்

இன்றைய சிறப்புப்பக்கத்தில் வெளியான சந்தை நிலைவரத்தில் உருளைக்கிழங்கின் விலை மருதனார்மடம் சந்தையில் 170 ரூபா எனத் தவறுதலாக உள்ளது. அதனை 70 ரூபா எனத் திருத்தி வாசிக்கவும்.

புகுமுக மாணவர் வரவேற்பு விழா
இடம் :- இராமநாதன் நுண்கலைத்துறை, மருதனார்மடம்
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
காலம் :- 03/04/2003 (வியாழக்கிழமை)
நேரம் :- காலை 10.00 மணி
அனைத்து வருட மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், 2 ஆம் வருட நடனத்துறை,
யாழ்ப்பாணம். (297) இசைத்துறை மாணவர்கள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.